Registered as a Newspaper

சஞ்சீவி

# உதயன்

விலை ரூ. 60

பக்கங்கள் 16 + 8

சுடர் : 38
கதிர் : 36

ஞாயிற்றுக்கிழமை 01 ஜனவரி 2023

மார்கழி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## இரு தமிழ்ப் பொலிஸாரால் சிறுமி தொடர் வன்புணர்வு

பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 1

பருதித்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுமியை இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பாலியல்வன்புணர்வுக்கு இரண்டு தமிழ் பொலிஸார் உட்படுத்தியுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. »15

## மாநகரசபை விவகாரத்தில் தொடர்கின்றது குழப்பம்

மேயர் தெரிவு நடத்தப்படவேண்டும் என்கிறார் அவைத்தலைவர் சீ.வீ.கே.

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். மாநகர சபைக்கான மேயர் தெரிவு இனி இடம்பெறாது என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் »04

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட

## தரிப்பிடக் கட்டண ஒப்பந்தம் இரத்து

பதவி விலகும் மணிவண்ணன் அறிவிப்பு

சிக்கல்களை ஆராய்கிறது நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் வாகனம் நிறுத்துவதற்கு குத்தகை அறவிடும் ஒப்பந்தம் உடனடியாக இரத்துச் செய்யப் »02

காணி விடுவிப்புக்காக

## விட்டுக்கொடுப்பின்றி ஒலித்த குரல் ஓய்ந்தது



யாழ்ப்பாணம், ஜன. 1

வலி. வடக்கு மக்களின் காணி விடுவிப்புக்காக சுமார் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக எந்தவொரு விட்டுக்கொடுப்புமின்றி - »02

## போதைப்பொருள் கொள்வனவுக்கு வீட்டுப்பொருள்கள் அடமானம்!!!

மகனை பொலிஸில் ஒப்படைத்த தாய்

முல்லைத்தீவு, ஜன. 1

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், உயிர்கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமையான 24 வயதான மகனை பொலிஸாரிடம் தாயார் ஒப்படைத்துள்ளார். »14



2023ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் நள்ளிரவு 12 மணிக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன. படம்:- ஐ.சிவசாந்தன்

உதயன் வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
நண்பர்கள்
அனைவருக்கும்
இனிய ஆங்கிலப்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்.

# புத்தாண்டில் தீர்வு முயற்சி வெற்றிகரமாக அமையும்

எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத தீர்வே தனது இலக்கு என்கிறார் ரணில்



**கொழும்பு, ஜனவரி 1**

நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத் தன்மை வருமாயின் அதை எதிர்வரும் சுதந்திரதினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பேன். இதை மட்டுமே என்னால் இப்போது கூறமுடியும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »15

## சர்வகட்சி கூட்டத்துக்கான திகதி இந்த வாரம் அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு விரிவு:- பக்.15

யாழில் கூட்டு பாலியல் வல்லுறவு

## சந்தேகநபர் 10 வருடங்களின் பின்னர் கொழும்பில் கைது

கொழும்பு, ஜன. 1

யாழ். நெல்லியடியில் இடம்பெற்ற கூட்டுப் பாலியல் வன்புணர்வுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் 10 வருடங்களின் »15

## தீர்வுக்கான பேச்சு வெற்றியளிக்க கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன்

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 1

அரசாங்கம் ஆரம்பித்துள்ள தீர்வுக்கான பேச்சு நல்லபடியாக நிறைவேறவேண்டும் என இந்தப் புத்தாண்டில் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். »15

## வீட்டுக்கிருத்திய நிகழ்வில் உலர் உணவுப்பொதிகள்

சாவகச்சேரியில் முன்மாதிரி விரிவு:- பக்.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடு கையேந்தாத வகையில்

# 2023ஆம் ஆண்டிலாவது பலமான பொருளாதாரம்

### பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள்



கொழும்பு, ஜன. 1

2023ஆம் ஆண்டிலாவது தவறுகளை சரிசெய்து, தேசத்தின் நலனுக்காக அனைத்துப் பிரஜைகளும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணையவேண்டும் - இவ்வாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டில் உலக நாடுகளிடம் இலங்கை கையேந்தாத நிலைக்கு வளர்ச்சி காணவேண்டும். அதற்காக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும். புதிய கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் நாடு அழிந்து விடும். இலங்கையுடன் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் தற்போது முன்னேறியுள்ளபோதும் இலங்கை ஏழை நாடு என்ற பிம்பத்தையே பெற்றுள்ளது.

இதற்கு காலங்காலமாக தேசத்தை ஆட்சி செய்தவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே காரணம். தவறான முடிவுகளே, சரியான முடிவுக்கு வழிகாட்டியாக அமையும். ஆக, பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது தேசத்தின் நலனுக்கான அனைத்துப் பிரஜைகளும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிய வளர்ச்சிப் பாதையில் நகர்த்த வேண்டும்- என்றார். (ம-ச,இ)

## சுமார் 10 வீதமான விடுதிகள் மூடுகை

கொழும்பு. ஜன. 1

நாட்டில் சுமார் 10 வீதமான ஹொட்டல்கள் மூடப்பட்டுள்ளன என்று இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதிலும் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹொட்டல்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் தற்பொழுது நிலவிவரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளால் இவ்வாறு ஹோட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன.

அத்துடன் பொருளாதார நெருக்கடியால் ஹொட்டல்களுக்கு மக்கள் வருகை தருவதிலும் பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதேவேளை நாட்டில் போதிய அளவு முட்டை விற்பனை செய்யப்படுகின்றது என்று அமைச்சர்கள் கூறினாலும் உண்மையில் அவ்வாறில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விலைக்கு முட்டை விற்பனை செய்கின்றனர். அதன்படி முட்டை 60 முதல் 65 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது - என்றார். (ம-14,இ)

## கொரோனாவிலிருந்து நாடு விடுபடவில்லை!

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு. ஜன. 1

கொரோனா பிடியிலிருந்து இலங்கை முற்றாக விடுபடவில்லை. கொரோனா அபாயத்தை தவிர்ப்பதற்கு முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு முறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனா, இந்தியா போன்ற நாடுகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. இதனால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். இலங்கை தற்போது பாரதூரமான கொரோனா ஆபத்தை எதிர்கொள்ளாத போதிலும் நாங்கள் முற்றாக ஆபத்திலிருந்து விடுபடவில்லை. பெருந்தொற்று எந்தவேளையிலும் உருவெடுக்கலாம். சமூக இடைவெளியை பின்பற்றுவது, முகக்கவசங்களை அணிவது, கைகளை சுத்தம் செய்வது போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் பின்பற்றுவதே பாதுகாப்பானது- என்றார். (ச-இ)

## நாடு முழுவதும் சீரான வானிலை

கொழும்பு. ஜன. 1

நாடு முழுவதும் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் சீரான வானிலை நிலவும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வட கிழக்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் - என்றுள்ளது. (ம)

## மொனராகலை மாவட்டத்தில் நால்வர் வெட்டிப் படுகொலை

மொனராகலை மாவட்டத்தில் இருவேறு இடங்களில் நால்வர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூர சம்பவம் பிபிலை நகர் மற்றும் பதல்கும்புர நகரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவங்களில் மூன்று ஆண்களும், ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளனர்.

பிபிலை நகரில் குடும்பப் பெண் ஒருவரும், இளைஞர் ஒருவரும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். உறவினர்களுக்கிடையிலான குடும்பத் தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை பதல்கும்புர நகரில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் குடும்பத்தலைவர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,இ)

### தரிப்பிடக்...

பட்டுள்ளது என்று நேற்றுடன் பதவிவிலகிய யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

அவர் பதவி விலகுவதற்கு முன்னதாக இந்த விடயத்தை ஒப்பந்ததாரருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இருப்பினும் அவ்வாறு உடனடியாக அதனைச் செய்ய முடியுமா என்பது தொடர்பில் யாழ். மாநகரசபை நிர்வாகம் ஆராய்ந்து வருகின்றது.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட 11 இடங்களில் வீதிகளில் வாகனம் நிறுத்துபவர்களிடம் கட்டணம் அறிவிட, தனியார் நிறுவனம் ஒன்றுடன் யாழ். மாநகரசபை ஒப்பந்தம் செய்திருந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முன்பாக வாகனம் நிறுத்துபவர்களுடன், குத்தகை ஒப்பந்தம் பெற்ற தனியார் நிறுவனத்தினர் சர்ச்சையில் ஈடுபடும் சம்பவங்கள் பதிவாகின.

இந்த நிலையில், ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தக நிலையத்துக்குள் நேற்று புகுந்த குத்தகை அறவிடுபவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளரைத் தாக்கியுள்ளனர். ஸ்ரான்லி வீதியில் வாகனத்தை நிறுத்தி விட்டு வர்த்தக நிலையத்துக்குச் சென்ற ஒருவரின் பின்னால் சென்ற குத்தகை அறவிடுபவர்கள், வர்த்தக நிலையத்துக்குள் வைத்து அவருக்குப் பற்றுச்சீட்டு வழங்கியுள்ளனர். எனினும், வர்த்தக நிலையத்திலிருந்து வெளியில் வந்த பின்னரே பணம் தருவேன் என அவர் கூறியுள்ளார்.

இதனால் இரு தரப்புக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. இரு தரப்பையும் வர்த்தக நிலையத்துக்கு வெளியில் சென்று தர்க்கப்படுமாறு வர்த்தக நிலைய உரிமையாளர் கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த குத்தகை அறவிடுபவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளரையும் தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ். மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரித்து, உடன் நடைமுறையாகும் வகையில் மாநகரசபைப் பகுதியில் குத்தகை அறவிடும் ஒப்பந்தத்தை இரத்து செய்தார். ஆனாலும் இதனால் எழக்கூடிய நிதிப் பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய விடயங்களை யாழ். மாநகரசபை நிர்வாகம் நேற்று ஆராய்ந்து விரைவில் இறுதி முடிவு எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### விட்டுக்கொடுப்பின்றி...

சலிக்காமல் போராடிய, வலி. வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் (வயது - 77) நேற்று மாரடைப்பால் உயிரிழந்தார்.

மயிலிட்டியைச் சொந்த இடமாகக்கொண்ட குணபாலசிங்கம், ஒரு சிறந்த புகைப்படக் கலைஞர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'பழங்காலப் புகைப்படங்களின் திருவிழா 2020' நிகழ்வில் வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

வலி. வடக்கில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 32 வருட காலங்களுக்கு மேல் வசித்து வரும் நிலையில் தனது கடைசிக் காலம் வரையிலும், அந்த மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றவேண்டும் என கோரிக்கையை முன் வைத்து போராடி வந்தவராவார்.

மயிலிட்டியை சேர்ந்த 700 மீனவக் குடும்பங்களும் பலாலியை சேர்ந்த 2000ஆம் குடும்பங்களும் மீள்குடியேற்றத்துக்காகக் காத்திருக்கின்றன எனவும், நாங்கள் உயிர் பிழைப்பதற்காக இந்த நிலங்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் போராடி வந்த குணபாலசிங்கம், ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து, எங்கள் துயரங்களை முன்வைப்பதற்காக வாய்ப்பை வழங்கவேண்டும் என கடந்த ஒக்ரோபர் மாதம் கோரிக்கையை முன்வைத்திருந்தார். அவரது கோரிக்கை நிறைவேறாத நிலையிலையே நேற்று உயிரிழந்துள்ளார். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கலாசாலையின் புதிய அதிபராக லலீசன்!



யாழ்ப்பாணம், ஜன. 1
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் புதிய அதிபராக செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் இன்று முதல் நடைமுறையாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய ச.கருணைலிங்கம் ஓய்வுபெற்றுள்ள நிலையில் பிரதி அதிபராக கடமையாற்றிய ச.லலீசன் அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியராக 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றியதுடன் அதிபராக 3 வருடங்களுக்கு கடமையாற்றிய ச.லலீசன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக 2009 ஆம் ஆண்டு முதல் கடமையாற்றி வந்ததுடன், 2014 ஆம் ஆண்டு முதல் மேற்படி கலாசாலையின் பிரதி அதிபராகவும் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

# வடக்கு கல்விப் பணிப்பாளராக ஜோன் குயின்ரஸ் நியமனம்



யாழ்ப்பாணம், ஜன. 1
வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக ரி.யோன் குயின்ரஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற்றின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த நிலையில் தற்போது வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக அவர் பதவியுயர்வு பெற்றுள்ளார். (ச-27)

# கோடாவுடன் இருவர் அச்சுவேலியில் கைது

அச்சுவேலி, ஜன. 1
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 20 லீற்றர் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)

# நல்லூர் அரசடிப் பகுதியில் வன்முறைக் கும்பல் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜன. 1
நல்லூர் அரசடிப் பகுதியில் சுமார் 13 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸ் சுற்றிவளைப்பில் சிக்கியது.

மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட 13 பேரில் ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர். 6 பேர் மானிப்பாயைச் சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் அரசடி மற்றும் அரியாலை பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொலிஸாரைக் கண்டதும் வன்முறைக் கும்பல் தம்வசம் இருந்த கைக்கோடாரி ஒன்றை அருகில் இருந்த நீர் நிலையில் வீசினர் என்றும் விசாரணைகளில் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் வன்முறைக் கும்பலிடமிருந்து வாள் ஒன்றும் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,20)


# விடுவித்த காணிகளை மீளவும் ஆக்கிரமிக்கின்றது இராணுவம்

## திருவையாறு மக்கள் கவலை



கிளிநொச்சி, ஜன. 1
இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட திருவையாறு படித்த மகளிர் திட்டக் காணியை மீளவும் படையினர் ஆக்கிரமித்து அறிவுறுத்தல் பலகையை நிறுவியுள்ளனர் என காணியின் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் படித்த மகளிர் திட்டம் ஊடாக 1975ஆம் ஆண்டு காணித்துண்டுகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. அங்கு விவசாயம் செய்து பொருளாதாரத்தில் முன்னேறிய மக்கள் நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக குறித்த காணியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.
படையினர் இந்தக் காணியை ஆக்கிரமித்த நிலையில் குறித்த காணியின் ஒரு பகுதி அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது. காணியின் உரிமையாளர்கள் கடந்த வாரம் அங்கு சென்று நிலஅளவை மேற்கொண்டபோது இராணுவத்தினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது.
நேற்றுமுன்தினமும் மக்கள் மீளக் குடியேறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளச் சென்ற நிலையில் குறித்த காணிக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என புதிதாக அறிவுறுத்தல் பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன. குடியேறுவதற்கான ஏற்பாடுகளை மக்கள் செய்துவரும் நிலையில், மீண்டும் காணியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவம் முயற்சிக்கின்றமை மிகப்பெரும் அடாவடித்தனமாகும்.
குறித்த காணி எமக்கு வழங்கப்பட்டுள்ளமையை பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆகவே தற்போதைய பொருளாதார நலிவு நிலையில் எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நிம்மதியான இருப்புக்கும் ஜனாதிபதி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)



# விபத்துக்களைக் குறைக்க வாகனங்களில் ஸ்ரிக்கர்

வவுனியா, ஜன. 1
வீதி விபத்துக்களைக் குறைக்கும் முகமாக வவுனியா பொலிஸாரால் கனரக வாகனங்கள், பாரவூர்திகள் மற்றும் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களுக்கு மின்னொளி ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கலகமகேவின் திட்டமிடலில் சீன அரச கூட்டுத்தாபனத்தின் அனுசரணையில் இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. (ம-14,110)

# இலங்கையில் 120,000 பேர் ஹெரோய்னுக்கு அடிமை!

## தேசிய மருந்து கட்டுப்பாட்டு சபை தகவல்

கொழும்பு, ஜன. 1
இலங்கையில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று தேசிய ஆபத்தான மருந்துக் கட்டுப்பாட்டுச்சபை வெளியிட்ட ஆய்வறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் நாணயக்கார தெரிவிக்கையில், சுமார் 4 லட்சம் பேர் கஞ்சா பயன்படுத்துவதாக அறியவந்துள்ளது. அதேவேளை ஐஸ் போதைப்பொருள் பாவனையாளர்களும் நாட்டில் அதிகரித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 40 ஆயிரம் பேர் புகையிலை, மது மற்றும் போதைப்பொருள் பாவனையில் இணைகின்றனர். இதேவேளை ஒவ்வோர் ஆண்டும் போதைப்பொருள் பாவனையால் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் - என்றார். (ச-இ)

# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா

யாழ்ப்பாணம், ஜன. 1
யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் திரையிடல்கள் நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு, இன்டிக்கா பெர்டினான்டோவினுடைய 'வெடி நொவடின்ன லமாய்' (குண்டு துளைக்காத சிறுவர்கள்) என்ற திரைப்படத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி வரை 7 நாள்கள் நடைபெறவுள்ள இந்தத் திரைப்படவிழாவில் தினமும் காலை 9 மற்றும் பிற்பகல் 3 மணிக்கு குறுந் திரைப்படங்களும், காலை 10.15, மதியம் 12.45, பிற்பகல் 4.15 மற்றும் மாலை 6.30 என நான்கு காட்சிகளாக தினமும் நான்கு திரைப்படங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படும்.

விருதுக்காகப் போட்டியிடும் 9 அறிமுகத் திரைப்படங்கள் ஆவணத் திரைப்படங்கள், வெவ்வேறு மொழியிலான திரைப்படங்கள் மற்றும் விருதுக்காகப் போட்டியிடும் உள்நாட்டு, சர்வதேச குறுந் திரைப்படங்கள் ஆகியவை இந்தத் திரையிடலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், இத்தாலி, ஸ்பெயின், மோல்ரா, பிரேசில், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, கானா, லெபனான், ஜோர்ஜியா, ஸ்வீடன், ஸ்லோவாக்கிய குடியரசு, கிர்கிஸ்தான் ஈராக்கி குர்கிஸ்தான், கனடா, போலந்து, துனிசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் திரைப்படங்கள் இத்திரைப்பட விழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இத்திரைப்படவிழாவில் துறைசார் விற்பன்னர்களின் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் இளைஞர்களுக்கான கலந்துரையாடல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'இலங்கை தமிழ் மொழி சினிமா : நேற்று, இன்று, நாளை' என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ள உரையாடலில் சுமதி சிவமோகன், விசாகேச சந்திரசேகரம், லெனின் எம். சிவம் மற்றும் சிவராஜ் ஆகியோர் கலந்துகொள்கின்றார்கள்.

இந்தத்திரைப்பட விழாவானது விருது வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து லெனின்.எம்.சிவத்தினுடைய த புரோரெக்ரர் என்ற திரையிடலுடன் நிறைவுபெறும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 25 . 12 . 1932

இறப்பு 29 . 12 . 2022

## கிருஷ்ணபிள்ளை செங்கமலம்

நெல்லியடி கல்லுவம் பகுதியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை செங்கமலம் அவர்கள் 29.12.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற விவேகாநந்தன் (கிளியன்) மற்றும் நித்தியானந்தராஜா (செல்வம் - சுவிஸ்), தற்பரானந்தன் (ஈசன்) கனடா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 02.01.2023 திங்கட்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் இல145, 2வது யுனிட், யோகபுரம் கிழக்கு, மல்லாவி எனும் முகவரியில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக யோகபுரம் புகழேந்திநகர் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
ஆனந்தன் - 077 6558 406
சுகந்தன் - 077 4048 930

தகவல்:
குடும்பத்தினர்


# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்)

தோற்றம் : 08.01.1937

மறைவு 30.12.2022



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம்- தனபாலசிங்கம் அவர்கள் 30.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் இராசபூபதி தம்பதிகளின் புதல் வனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்- தங்கரத்தினம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நேசமலரின் அன்புக் கணவரும் அமரர்களான கனகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் சிவபாலசிங்கம் (சிவம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான அன்னபூரணம், சரஸ்வதி, சிந்தாமணி ஆகியோரின் மைத்துனரும் நந்தினி (வசந்தி), மாலினி (சாந்தி), நளினி (ஜெயந்தி) பிரான்ஸ், யாழினி (சுகந்தி) சுவிஸ், தயானந்தசிங்கம் (சத்தியன் ) பிரான்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார், புரந்தரகுமார், றெமி (பிரான்ஸ்), சிவராஜா (சுவிஸ்) ரஞ்சிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்சினி-புவிச்செல்வம், யசோதர்னி - கமலதாசன் (கண்ணன்), பிரியதர்ஷன் (பிரான்ஸ்), கஜகபீஷன், கஜலக் ஷி, நிஷாந்தன், நிரோசன், நிலாஜினி, சுஜந்தா, சுஜீபன், தாருகா, தர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் தன்சிகா, ஹரிகரன், அக் ஷயா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2023) முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று விளான்விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
077 0710774
075 3309665

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பிறெட் ரவிராஜ்



பிறப்பு 06.10.1994

இறப்பு 01.01.2018

உன்தாய், தந்தை உன்னை
- பாசமாய் வளர்த்து
பாராட்டி சீராட்ட பாதி வழியிலே
எம்மை பரிதவிக்க விட்டு விட்டுச்
- சென்றதேனோ?
பாசத்தின் திருவருக்களாய் பிறந்த
எம் அன்புச் சகோதரனே!
கூடிழந்த பறவைகளாய் தவிக்கின்றோம்
- நாங்கள்



ராசு சுதன்
பிறப்பு 25.07.1983
இறப்பு 01.01.2018

ஈச்சமோட்டை

குடும்பத்தினர்

# சேவை நலன் பாராட்டு



சாவகச்சேரி
மின்பாவனையாளர் சேவை
நிலையத்தில் கடமையாற்றி
நேற்றுடன் (31.12.2022)
சேவையிலிருந்து
ஓய்வுபெற்று செல்லும்

**திரு. ந.சிறிமுரளீதரன்**
(மின்பாதையாளர்)

அவர்களின் சேவையை
நன்றியுணர்வுடன்
பாராட்டுவதோடு அவரின்
ஓய்வுக்காலம்
சிறப்பாக அமைய
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
மனைவி
பிள்ளைகள்
மருமக்கள்

*மாநகரசபை...*

தெரிவித்துள்ள நிலையில், மேயர் தெரிவு நடத்தப்படவேண்டும் என வடக்கு மாகாண அவைத் தலைவரும், நீண்ட காலம் மாநகரசபையின் ஆணையாளராக இருந்தவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் மேயர் வி.மணிவண்ணன் பதவி விலகியுள்ளார். அவரால்கடந்த 21ஆம்திகதி முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. அதற்கு முன்னர், முன்னைய மேயர் ஆனோல்டின் வரவு - செலவுத் திட்டமும் 2 தடவைகள் தோற்கடிக்கப்பட்டிருந்தன.

மணிவண்ணன் பதவி விலகியுள்ள நிலையில், புதிய மேயர் தெரிவு இடம்பெறாது என உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்தை சீ.வீ.கே.சிவஞானம் மறுத்துள்ளார்.

'சபை கலைக்கப்படவோ அல்லது 3 முறை வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதாலோ மேயரை தெரிவு செய்யாது இருப்பதற்கு எந்தவொரு சட்டவியாக்கியானங்களும் இல்லை. உள்ளூராட்சி ஆணையாளர் தனது தலைமையில் சபையைக் கூட்டி மாநகர மேயரைத் தெரிவுசெய்யவேண்டும். அவ்வாறு தெரிவு செய்யாது இருப்பதற்கு எந்தவொரு சட்டவியாக்கியானங்களும் இல்லை' - என்றார்.

இதேவேளை- மாநகரசபை மேயர் பதவி விலகியுள்ள நிலையில் மீண்டும் ஒரு முறை மேயர் தெரிவு நடத்துவது தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் மயக்க நிலை காணப்படுவதாக உள்ளூராட்சித்திணைக்கள வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

(அ-ஒ-5-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தீர்க்கமான 2023!

பல்வேறுபட்ட சவால்கள், நெருக்குவாரங்கள், பொருளாதார நெருக்கடிகள், அரசியல் பிரச்சினைகள், வரலாற்றுத் திருப்பங்கள் நிறைந்ததாக 2022 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து, இன்று புத்தாண்டு மலர்ந் திருக்கின்றது. காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை என்பதுபோல்தான் இலங்கைத் தீவின் புத்தாண்டு நகர்வுகள் கடந்த காலங்களில் அமைந்தி ருக்கின்றன. அதே பாதையில், 2022ஆம் ஆண்டும் பொருளாதாரப் பேரிடர், வங்குரோத்து நிலை என்று துன்பியல்களைத் தந்தபோதிலும், கூடவே 'அரகலய' மக்கள் புரட்சி போன்ற பல்வேறுபட்ட படிப்பினை களையும் வழங்கத் தவறவில்லை. இதன் தொடர்ச்சி யாக மலர்ந்துள்ள புத்தாண்டும் பல்வேறுபட்ட திருப் பங்களை – வரலாற்றுப் பதிவுகளை தமிழர் தாயகத் தில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இலங்கைத் தேசமெங்கும் ஏற்படுத்த வல்லது என்பதில் மறுகருத் தில்லை.

வெளிப்படையாகச் சொல்வதாயின், காணி விடு விப்பு விவகாரமாக இருக்கட்டும், அரசியல் கைதிக ளின் விடுதலையாக இருக்கட்டும், காணாமலாக்கப் பட்டவர்களின் பிரச்சினையாக இருக்கட்டும் அல்லது அரசியல் தீர்வாக இருக்கட்டும் இவற்றில் வழக்க மான அணுகலாக அல்லாமல் 'கொஞ்சம் தீர்க்கமான ஆண்டாகவும், தீர்மானம் மிக்கதான ஆண்டாகவும் மலர்ந்திருக்கின்றது புத்தாண்டு.


கடந்த ஆண்டுகளிலும் அரசியல் கைதிகள் விடுவிக் கப் பட்ட போதிலும் அந்த விடுவிப்பானது ஆத்மாத் தமான நகர்வாக இருக்கவில்லை. 'அரசியல் கைதி கள்' என்ற பொதுப்பார்வையின் கீழ் நான்கு அல்லது ஐந்து ஆண்டு கள் சிறையில் இருந்த கைதிகள் விடு விக்கப்பட்டார் களே அன்றி, பாரதூரமான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் தசாப்தங்களாக சிறையில் இருப்பவர்கள் விடுவிக்கப்பட வில்லை. அவர்களை விடுவிக்க கடந்த காலங்களில் பரிசீலனை கள்கூட இடம்பெறவில்லை. ஆனால், தற்போது 'அனைத்து அரசியல் கைதிகளும்' விடுவிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் உரத்து ஒலிப்பதுடன், அதற் கான நடைமுறை நகர்வு களும் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாகவே கருதமுடிகின்றது.

தமிழர்களுக்கான தீர்வு விடயமும் தற்போது பேசு பொருள் பெற்றிருக்கின்றது. வழக்கமான ஒற்றை யாட்சி, சமஷ்டி என்ற பித்தலாட்டத்தை தமது அரசி யலாகக் கொண்டிருந்த கட்சிகள் யாவும் தமிழர்களுக் குத் தீர்வு வழங்க வேண்டும் என்ற விடயத்தில் விரும் பியோ? விரும்பாமலோ? தற்போது ஒன்றித்திருக்கின் றன. இது தொடர்பான சர்வகட்சிப் பேச்சு 2022 இன் இறுதிப் பகுதிகளில் இடம்பெற்ற போதிலும், இதன் அடுத்தகட்டச் செல்நெறியைத் தீர்மானிக்கப்போவது புத்தாண்டு தான். ஜனாதிபதி ரணில் தெரிவித்ததைப் போன்று, 'சுதந்திர தினத்துக்குள் தீர்வு காணப்படும்' என்பது சாத்தியமற்றது என்றபோதிலும் இந்தத் தீர்வை நோக்கிய பயணப்பாட்டுக்கு 2023ஆம் ஆண்டு மிகத் தீர்க்கமானது. ஒன்றில் 'வரலாற்றுத் தீர் வுடனான திருப்பம்' அல்லது 'ஏமாற்றம்' என்ற இரண்டு செய்திகளில் ஏதோவொன்றை இந்தப் புத் தாண்டு தரத்தான் போகின்றது.

இனப்பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்க ளில் அரசாங்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சித் தலைமைகள் தீர்க்கமாகவும் தீர்மானமாக வும் தெளிந்த அறிவுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை. வழக்கமான அரசி யல் பகடையாட்டங்களுக்கு எடுபடாமல், மக்கள் மயப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்தி மிகக்காத் திரமான முடிவுகளை எடுக்க புத்தாண்டு வல்லமை யைத் தரட்டும்!

நாளொரு நல்வார்த்தை

"நீ சிறிய செயல்களுக்கு உண்மையுள்ளவனாக இருந் தால் பெரிய செயல்களுக்கு அதிகாரியாகலாம் " – இயேசு



# முஸ்லிம் வட்டாரத்துடன் முல்லைத்தீவு குமாரபுரம்

## அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஜன. 1

கரைதுறைப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட கணுக்கேணி வட் டாரத்தில் உள்வாங்கப்பட்டிருந்த குமாரபுரம் தமிழ்க் கிராமம் முஸ்லிம் வட்டாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கு குமாரபுரம் கிராம மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லை நிர்ண யக் குழுவால் வட்டாரங்கள் குறைப்புச் செய் யப்பட்ட போதும் முழுமையான சிங்கள மக்களைக் கொண்ட வெலிஓயா பிரதேசத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் கிராமங்க ளிலேயே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளன என்று கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 13 வட்டாரங்களைக் கொண்ட கரைதுறைப் பற்று பிரதேசசபை எல்லை நிர்ணயக் குழு வால் 10 வட்டாரங்களாகக் குறைக்கப்பட் டுள்ளது. அதற்கமைய கணுக்கேணி வட்டா ரத்தில் குமாரபுரம் கிராமம் உள்வாங்கப்பட்டி ருந்தது. குமாரபுரம் கிராமத்தில் 80 முஸ்லிம் குடும்பங்களும், 333 தமிழ்க் குடும்பங்களும் வசிக்கின்றன. குமாரபுரம் கிராமத்தை தற் போது ஹிச்சிராபுரம் வட்டாரம் என புதிதாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதியுடன் இணைத்துள்ளனர்.

குமாரபுரம் கிராமத்தில் பழமைவாய்ந்த வர லாற்று சிறப்புமிக்க முருகன் ஆலயம் காணப்ப டுகின்றது. தமிழர்களின் பூர்வீக வரலாற்று அம்சங்களும் இருக்கின்றன. இந்த நிலை யில் குமாரபுரம் கிராமத்தை முஸ்லிம் மக்கள் வாழும் வட்டாரத்துடன் இணைப்பதை குமா



ரபுரம் கிராம மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கூகிள் வரைபடத்தில் எமது கிராமத்தை பார் வையிடும்போது குமாரபுரம் முஸ்லிம் கொலனி என்று பெயர் காணப்படுகின்றது. தரைத்தோற்ற அமைப்பை வரைபடங்கள் ஊடாக பார்த்தே இந்தத் தீர்மானத்தை எடுத் துள்ளனர். எல்லை நிர்ணய அமைப்பு எல் லைகளை நிர்ணயம் செய்யும்போது கிராம மட்ட அமைப்புக்களை அழைத்து பேசியி ருக்க வேண்டும். இந்தத் தவறைத் திருத்த நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் போராட்டங்களில் ஈடுபடுவோம் என்றார்.

மேலும் தமிழ் மக்கள் அதிகம் வாழும் குமா ரபுரம் கிராமத்தை கணுக்கேணி வட்டாரத்து டன் இணைக்குமாறுகோரி முல்லைத்தீவு மாவட்டச்செயலர் க.விமலநாதன், காணி மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன் ஆகியோரிடம் மனுவொன்றையும் மக்கள் கையளித்துள்ளனர் - என்றார். (ம-14,19)

**நாளை**

**02.01.2023**

**திங்கட்கிழமை**

**மார்கழி 18**

சுபநேரம் : 12.30 - 02.00

ராகுகாலம் : 08.00 - 09.30

**கார்த்திகை விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு அஞ்சலி



தோற்றம்
06 - 10 - 1961

மறைவு
11 - 01 - 2022

திருமதி
## சிவனேஸ்வரி இராஜநாதன்

ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உன் உயிர்மூச்சு மறைவதில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் ஒழிவதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

குடும்பத்தினர்
(விசுவலிங்கம் வள்ளிநாயகி)

(cr.37466) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
23 - 12 - 1939



இறப்பு
26 - 12 - 2022

## சோமசுந்தர ஐயர் லோகேஸ்வரசர்மா

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தர ஐயர் லோகேஸ்வரசர்மா அவர்கள் 26.12.2022 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தர ஐயர் இராஜலட்சுமி அம்மா தம்பதிகளின் மகனும், காலஞ் சென்ற சபாரத்தின குருக்கள் தங்கம்மா தம்பதிகளின் மகள் புவனேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜ சர்மா (கனடா), காலஞ்சென்ற நாகலட்சுமி அம்மா அவர்களது தம்பியும், வரதராஜசர்மா (லண்டன்) வின் அண்ணனும், காலஞ்சென்ற சண்முகரட்ன சர்மா (சர்மா மாஸ்டர்-புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி) , காலஞ்சென்ற கமலாம்பாள் (கனடா) மற்றும் லோகேஸ்வரி (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும், வாசு, வத்சலா(கனடா), முரளி (பிரான்ஸ்), வனஜா(மலேசியா) அவர்களது சித்தப்பாவும், ரவி (பிரான்ஸ்) , உமா(கோப்பாய்) , நிர்மலா (இந்தியா) , மாலினி (கோப்பாய்), கிரிஜா (சுவிஸ்) , ரோகினி (முன்னேஸ்வரம்) அவர்களின் மாமனாரும், ரமணன், ரட்சாயினி (லண்டன்) அவர்களது பெரியப்பாவும் ஆவார்.

அன்னார் கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் 40 வருடங்கள் பூசகராக பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. அன்னாரது இறுதிக்கிரியைகள் 02.01.2023 அன்று கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று 11.00 மணியளவில் கொழும்புத்துறை மேற்கு, சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் தகனம் செய்ய கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"உதயகிரி"
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
மனைவி, மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 868 9197

(CS 22468) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 02 - 1950



மறைவு
28 - 12 - 2022

## நடராசா சிவரட்ணம்

(ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையினைப் பிறப்பிடமாகவும் முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட **நடராசா சிவரட்ணம்** அவர்கள் 28.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா வள்ளியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் அருந்ததி தம்பதிகளின் மூத்த மருமகனும் நளினி (வசந்தி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி பிரதீபா சசிகுமார் (ஆசிரியை), சாரூபன் சிவரட்ணம் (நிர்வாக இயக்குநர் V2 Travels மற்றும் கனடா குடிவரவு ஆலோசகர்), திருமதி காருண்யா மாதீபன் (முன்னாள் உதவி முகாமையாளர் மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. வே.சசிகுமார், திருமதி சா.விசாந்தினி, திரு. க.மாதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழினியா (அமரர்), அருள்சாயித்யன், அருந்ததி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2023 (திங்கட்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

0772367407

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 - 02 - 1973



இறப்பு
30 - 12 - 2022

## யோகானந்தசிவம் சேந்தன்

(இணைந்த கணித பாட ஆசிரியர் மட் / வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை)

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோகானந்தசிவம் சேந்தன் 30.12.2022 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் யோகானந்தசிவம் இந்திரா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தவநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும், புலர்ந்தினி அவர்களின் அன்புக் கணவரும், கோபிகன், கிருஷ்ணிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தயாளன், சுலோஜினி, குமரன், விசாகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபானந்தன், கலாபன், காலஞ்சென்ற துஷாந்தன், யசோதினி ஆகியோரின் மைத்துனரும் சிவானுஜன், சிவதர்சினி, மயூரி, கிருஷாயினி, ஜோதீசன் ஆகியோரின் அன்பு மாமனும், நிகேஷ் அவர்களின் பெரிய தந்தையும் ஆவரர். அன்னாரது இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் இன்று (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் (குமரன்) - 075 8840728
குடும்பத்தினர்

(CS 22469) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய 2023 புத்தாண்டு வாழ்த்துக்கள்

# செல்வி
## நகைஅகம்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

தங்கப்பவுண் நகை வியாபாரம் — Manufacturers of Gold Jewels

**CHELVI Nakai Agam**

T.P: 021 222 9441

205/1, K.K.S வீதி,
குளப்பிட்டி.

---

## காணி விற்பனைக்கு

கரந்தன் சந்தி, நீர்வேலியில்
இராசவீதியிலிருந்து 100m
தூரத்தில் அமைந்துள்ள
10 1/2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
பகுதியாகவும்
பிரித்துக்கொடுக்கப்படும்.

**077 346 5332**

---

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

---

## வீடு வாடகைக்கு

யாழ். பிறவுண் வீதி, நீராவியடியில் வீடு மாத
அடிப்படையில் வாடகைக்குண்டு.

T.P: 077 990 6867

---

## வீடு வாடகைக்கு

கோவில் வீதியில் (நல்லூர் முருகன் ஆலயத்திற்கு
மிக அருகில்) சகல வசதிகளுடன் கூடிய ஐந்து
அறைகளைக்கொண்ட மேல்மாடி வீடு உடன்
வாடகைக்கு. இரண்டு குளியலறைகள், ஹோல்,
கிச்சின் மற்றும் வாகனத்தரிப்பிட வசதியுண்டு.
தேவையான தளபாடங்களுடனோ அல்லது
தளபாடம் அல்லாமலோ வழங்கப்படும்.

**077 350 1812**

---

## காணி விற்பனைக்கு

STANLEY வீதி, யாழ்ப்பாணத்
தில் அமைந்துள்ள அரை (1/2)
பரப்பு காணி விற்பனைக்கு
உண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 645 2487

(CS 48077)(3/6)

---

Happy NEW YEAR 2023

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

1960 ஆம்
ஆண்டுமுதல்
முன்னணியில்
இயங்கும்

# சாரங்கா
## நகை மாடம்



# சாரங்கா நாணயமாற்று சேவை

அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு
நாணயமாற்று சேவை

WESTERN UNION MONEY TRANSFER

Ria MONEY TRANSFER

- வெளிநாட்டு நாணயங்களுக்கு கூடிய விலை வழங்கப்படும்.
- பழைய நகைகளுக்கு கூடிய விலை.
- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 2226972, 021 222 8869

**Hotline: 0773577212**

(CR 38359)(3/6)

---

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

# றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான "றோயல் நெய்" கொண்டு
தயாரித்த அறுசுவை உணவுகளுடன்
கொண்டாடி மகிழுங்கள்




Packed By:-
**Royal Industries®**
Marketed By:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து
பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும்,
பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

# சேவை நலன் பாராட்டு

## திருமதி ஈஸ்வரி அன்ரன் செல்வதயாளன்

**(ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் யாழ்.கல்வி வலயம்)**



மணிவிழா மங்கையே!
மங்கையரின் மாணிக்கமே!
வடமராட்சியில் வந்துதித்த வதனமே!
பார்போற்றும் உத்தமியே!
பிறந்த மண்ணிற்கு
பெருமை சேர்த்த நங்காய்
உன் உறவினர் முதல்
நண்பர் வரை ஒரு சேர பார்க்கும் நற்திலகமே
தற்காத்து தற்கொண்டான் பேணி
தன்குலம் காக்கும் குலவிளக்கே
அன்பான சகோதரர்க்கு நற் சகோதரியாய்
பெற்ற மக்கள் பெறாமக்களின்
நற் தாயாய் நல்லாசானாய்
உற்றவர்க்கு உறவாய்
நண்பர்க்கு நல்ல தோழியாய்
நல்லாசான்களின் நல் வழிகாட்டியாய்
நல்ல ஒரு குருவாய் குணத்தின் குணசீலியாய்
ஆசிரியத்துவத்திற்கு அணிசேர்த்து
ஆசிரியருக்கு ஆலோசகராய்
சுறு சுறுப்பின் தத்துருவமாய் கல்விக்கு
வயதில்லை

Congratulations

கற்பதற்கு தயங்காதே என எடுத்துக் காட்டாக
எடுப்பான நடையும் மிடுக்கான பேச்சும்
பணிக்கு அன்று பண்புக்கும்
பயம் எதுவும் இன்றி பயப்படுவோரை பக்குவப்படுத்தி செப்பிடும்
சிறந்த சமூக சேவையாளன்
செல்வதயாளன் அகவை அறுபது என்கிறார்கள்
நம்பமுடியாது வியக்கும்
தோற்றப் பொலிவு - அவரது அகம் சிறக்க
சுகம் பல பெற்று நலம் பட வாழ வாழ்த்தும்

Congratulations! Best Wishes

**உறவினர்கள்,**
**பெறாமக்கள், மருமக்கள்.**

**சேவை விபரம்**

- 1988.08.17 - 1989.03.26 - யா/ ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்
- 1989.03.27 - 1991.05.01 - யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்
- 1991.05.02 - 1992.12.31 - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
- 1993.01.01 - 1995.01.03 - யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்
- 1995.01.04 - 1997.02.01 - யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
- 1997.02.02 - 1999.01.26 - யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்
- 1999.01.27 - 2013.12.31 - யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
- 2014.01.01 - 2022.12.31 இன்றுவரை - வலயக்கல்வி அலுவலகம்

(ஆசிரிய ஆலோசகர்) யாழ்ப்பாணம்.

---

அனைத்து உறவுகளுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும் எமது இனிய

## புதுவருட நல்வாழ்த்துக்கள்



(45 வருடகால நம்பிக்கை
மற்றும் அனுபவம் உள்ளவரால்
நடத்தப்படும் ஸ்தாபனம்)
என்றும் உங்கள்
ஆதரவை நாடும்

# "சிவமஹால் சில்க்ஸ்"

உரிமையாளர், ஊழியர்கள்

Be Bold Be Uniqve BeBrilliant

இல. 51, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3137, 077 755 5983,
075 543 5310
shiyamahalsilks.sms@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 02.08.1937 மறைவு 12.01.2022

திருமதி

## செல்லப்பாக்கியம் சிவானந்தம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்)

**திதி: 01.01.2023**

இன்பர்சிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் சிவானந்தம் அவர்களின் முதலாமாண்டு நினைவுக் கிரியைகள் இன்று (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

"ஜலதீபம்"
இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

அன்புடன்
குடும்பத்தினர்
071 321 6996

# மணப்பெண் தேவை

1. கொடிகாமம் - Jaffna Town. இந்து கௌரவகுலம் (V). ஆயிலியம். 1980. Lawyer, Australia citizen , Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile Number - 32385
2. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). ரோகிணி. 1988. Senior Management Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31457
3. மாவிட்டபுரம். இந்து கௌரவகுலம்(V). கார்த்திகை. 1988. Electronic Eng, MBA, Australia Citizen , Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 29544
4. Jaffna Town இந்து கௌரவகுலம் (V). சித்திரை. 1961. A/L, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28202
5. திருகோணமலை - யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (K). கேட்டை.1980. A/L, Private Logistics, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 25843
6. வடமராட்சி. இந்து. கௌரவகுலம் (V). சித்திரை. 1974 A/L Machine Maintenance, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25446
7. வட்டுக்கோட்டை - மூளாய். இந்து. கௌரவகுலம் (V). கேட்டை. 1983. Charted Accountant , Australia Citizen , Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 24770
8. நல்லூர். இந்து. கௌரவகுலம் (V). திருவோணம். 1990. A/L, UK Citizen, Divorce (Nullified) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 33135
9. தாவடி. இந்து. கௌரவகுலம் (V). சித்திரை. 1984.BA(Hons),ACCA, Charted Accountant, UK Citizen , Divorce (Nullified) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 26248
10. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). சதயம். 1978 Masters of Engineering , UK citizen , Divorce (Nullified) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 26209
11. பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). அத்தம். 1982.Graduate, Accountant , UK Citizen , Divorce (Nullified) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 24510
12. சித்தன்கேணி - நல்லூர். இந்து. கௌரவகுலம் (V). அனுசம் 1983. ICT Masters, MA, UK Citizen, கல்யாண எழுத்து மட்டும் நடந்தபின்பு Divorce ஆகிய மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 13383
13. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). விசாகம். 1975 MSC, Business, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25104
14. நயினாதீவு. இந்து. கௌரவகுலம் (V). ரோகிணி. 1981. MSC, IT Consultant, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25041
15. ஆவரங்கால். இந்து. கௌரவகுலம் (K). உத்திராடம். 1979. ACCA, Accountant , UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 24530
16. யாழ்ப்பாணம். Roman Catholi, கௌரவகுலம்(K).1989 Masters Degree, Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 30117
17. யாழ்ப்பாணம். Roman catholic (K). 1978. A/L , Business , UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 29282
18. பருத்தித்துறை - ஏழாலை. இந்து. கௌரவகுலம் (K). திருவாதிரை. 1987 BENG, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. தகப்பன் (R.C) தாய் இந்து. பதிவெண் - 28061

தொடர்புகளுக்கு S.Sarma J.P Astrologer
போன் +Whatsapp : 077 803 8193

(cs 22491) (2.6)

INNERWEAR SINCE 1981

Moffi BONTEX

MG Industries (Pvt) Ltd, the manufacturers of the brands "Moffi" and "Bontex" are now Directly Distributing their products. Discounts will be offered for Wholesale quantities. We will also consider offering area wise agencies to suitable Canditates. Please contact us for further information.

MG Industries (Pvt) Ltd..
No.76A, Kawdana- Attidiya Road Dehiwala

Contact No: 011 438 2300 /2 / 076 394 6830

GOODWIN

## ஆட்டோ மெக்கானிக் தேவை

சுன்னாகத்தில் உள்ள வாகனதிருத்தகம் ஒன்றிற்கு முச்சக்கரவண்டி (ஆட்டோ) மெக்கானிக் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 041 4051

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் மருதனார்மடம் வீதியில் 10 பரப்பும், உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 60 111 35

## அறை வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி அம்மாச்சி உணவகம் அருகில் சமையல், குளியல் வாகன தரிப்பு வசதிகளுடன் 14 x 12 அறை வாடகைக்குண்டு.

076 763 1952

## காணி விற்பனைக்கு

46 பரப்பு தோட்டம் 775 பஸ் பாதையை முகப்பாகக்கொண்டது. சுன்னாகம் புத்தூர் வீதி நவக்கிரியில் மின்சாரம் கிணற்றுடன் காணி விற்பனைக்குண்டு.

077 706 6487

பிரசித்தி பெற்ற Polysacks பைகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து


## விற்பனை பிரதிநிதிகள் (Sales Representative)

தேவை

E- Mail : jobs@nawatagroup.com

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 • 04 • 1938



மறைவு 01 • 01 • 2021

## பிரான்சிஸ் வின்சென் டீ போல்

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
என்றும் எம் இதயங்களில் மணம் வீசும்
அன்பு நிறைந்த ஐயாவே!

அன்பு காட்டுகையில் அன்னையாய்
அறிவுரை கூறுவதில் தந்தையாய்
அநியாயங்களை தட்டிக் கேட்பதில் வீரனாய்
ஒரு சமூகமே உம்மை மதிக்கும் நல்ல தலைவனாய்
என்றும் எம்முடன் நீர் வாழ்ந்திருக்கின்றீர்.

நீர் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உம் நினைவு
நீர் காட்டிய பாதையிலே நாம்
என்றும் செல்வோம் உம்மை தொடர்ந்து
உம் நித்திய வாழ்வில் நீர் இன்புற்றிருக்க
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ரோஸ் கொட்
[illegible] வீதி,
முனை பருத்தித்துறை

நீங்கா நினைவலைகளுடன்
குடும்பத்தினர்

(cs.41806) (2.6)

### திருவாசக முற்றோதல்

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று முதலாம் திகதி காலை 7 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

### தமிழரசுக் கட்சியின் மாநாடு: மன்னாரில் கிளைக் கூட்டம்!

மன்னாரில் நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பாக ஆராயும் முகமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைக் கூட்டம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் அவரின் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கூட்டத்தில் இன்றைய காலகட்டத்தில் கட்சி எதிர்கொள்ளும் சவால்கள், உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் சாத்தியக்கூறுகள் ஏற்பட்டால் அதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது போன்ற முக்கியமான விடயங்களும் ஆராயப்பட்டன. கூட்டத்தில் மன்னார் மாவட்ட தழிரசுக் கட்சியின் செயலாளரும் நகரசபை உறுப்பினருமான யன்சன் பிகிராடோ, தமிழரசுக் கட்சியின் இளைஞரணி செயலாளரும் சட்டத்தரணியுமான எஸ். டினேசன், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி உள்ளிட்ட கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

(ம-14.60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களில் நிதானமும் விவேகமும் இருக்கட்டும்

## புத்தாண்டு வாழ்த்துரையில் மன்னார் ஆயர் அறிவுறுத்து



சுதந்திரத்துக்குப் பின்னரான ஈழத்தமிழரின் அரசியல் வரலாறு என்பது சிங்களத் தலைவர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட வரலாறாகவே இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் ஒரு பேச்சு முன்னெடுக்கப்படும் நிலையில், தமிழர் தரப்பு மிகவும் நிதானமாகவும், விவேகமாகவும் இப்பேச்சுக்களில் பங்கேற்கவேண்டும் - இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார் மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

காலச்சக்கரத்தின் நகர்வில் மீண்டும் ஒரு புதிய வருடத்துக்குள் நாம் காலடி பதித்துள்ளோம். பல்வேறு அனுபவங்களை வாழ்க்கைப் பாடமாகத்தந்த 2022ஆம் ஆண்டு நம்மிடமிருந்து விடைபெற்றுள்ளது. சுகமான மற்றும் சோகமான அனுபவங்களைக் கடந்து, நாம் வந்துள்ளோம். பல்வேறு எதிர்பார்ப்புகளோடு, புதுவருடத் தீர்மானங்களோடு புதியதோர் ஆண்டுக்குள் நாம் நுழைந்துள்ளோம். இப்புதிய ஆண்டு நம் அனைவருக்கும் அமைதியும் அருளும் அன்பும் நிறைந்த ஆண்டாக அமையட்டும்!

நாட்டின் இன்றைய பொருளாதார, அரசியல் சிக்கலில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் மறைமுக நிகழ்ச்சிநிரலுக்கு நாம் பலியாக முடியாது. பேச்சு முன்னெடுப்புக்களை ஆரம்பித்திருக்கும் இன்றைய ஆட்சியாளர்கள் பேச்சிலும் செயலிலும் இதயசுத்தியோடு ஈடுபட்டால் மட்டுமே இம்முயற்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. பிறந்திருக்கும் இப்புதிய ஆண்டில் நாம் எல்லோரும் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு எட்டப்படுமானால் இந்த ஆண்டு இலங்கை வரலாற்றில் முக்கியமான ஓர் ஆண்டாக அமையும் எனலாம்.

உலக அளவிலும், தேசிய அளவிலும் பல அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட நிலையிலேயே புதிய ஆண்டு புலர்ந்திருக்கின்றது. திரிபடைந்த கொரோனாவின் அச்சுறுத்தல் மீண்டும் உலக அளவில் தலைகாட்ட ஆரம்பித்துள்ளது. இந்த நிலைமை மீண்டும் எம்மை பீதிக்குள் ஆழ்த்துகின்றது. போதைவஸ்து பாவனை என்பது ஒரு போராக நம்மேல் தொடுக்கப்பட்டுள்ளது. இத்தீமை என்றுமில்லாதவாறு நம் நாட்டை அச்சுறுத்துகின்றது. ஆற்றலும் வலிமையும்கொண்ட எம் எதிர்காலத் தலைமுறையினரைக் குறிவைத்து முன்னெடுக்கப்படும் இந்தப் போதைவஸ்துப் போருக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து துரிதகதியில் போராட அழைக்கப்படுகின்றோம்.

கடந்த வருடத்தின் மனக்காயங்கள் ஆறட்டும். புதிய ஆண்டில் புதிய நம்பிக்கைகள் துளிர்க்கட்டும். நம் எண்ணங்கள்- எதிர்பார்ப்புக்கள் சித்தி பெறட்டும். உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ம)

# அனைத்து மக்களுக்கும் சுபீட்சத்தைத் தரட்டும்!



மலரும் புத்தாண்டு இலங்கைவாழ் அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்ததாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் ஐந்தாவது பேராயர் ஆகிய நான் மட்டற்ற மகிழ்வு அடைகின்றேன். அதிலும் சிறப்பாக யாழ்.மண்ணில் வெளிவரும் நாளிழ்களில் ஒன்றான 'உதயன்' பத்திரிகையின் ஊடாக புதுவருட வாழ்த்துக்களைத் தமிழ் மக்களுக்கு தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன். இந்தப் புதுவருடமானது அனைத்து மக்களுடைய வாழ்விலும் சந்தோசத்தையும் வளங்களையும் கொண்டுவரட்டும்.

**பேராயர் கலாநிதி வே.பத்மதயாளன்**
தென்னிந்திய திருச்சபை, யாழ். ஆதீனம்

# நெருக்கடிகள் நீங்க வருக புத்தாண்டே!



பூவுலகில் வாழும் உயிர்களுக்குத் தேவையான நான்கு பருவங்களைக்கொண்ட ஆண்டு ஒன்று கழிந்து தாங்கொணா இயற்கை சீற்றங்களுள் 2023 இன்று புத்தாண்டாகப் பூக்கிறது.

எம்மையெல்லாம் துன்பத்திலும் பற்றாக்குறையுடனும் வாழ்வித்த 2022ஆம் ஆண்டை வழியனுப்பிவிட்டு, புத்தாண்டை எமக்கும் நாட்டுக்கும் புதுவாழ்வு தர வா என வாழ்த்தி வரபேற்போமாக. எத்தனையோ துன்பதுயரங்கள் என்று நாட்டுமக்களையும், தட்டுப்பாடு, பற்றாக்குறை அந்நியச் செலாவணி இன்மை, ஏற்றுமதியின்மை, இறக்குமதி அதிகரிப்பு, வந்த கப்பலுக்குப் பணம் செலுத்த இயலாமை என எம் நாட்டையும் கடும் நெருக்கடிக்குள் ஆழ்த்தி அகன்று செல்லும் ஆண்டை வழியனுப்பி எமக்கும் எம் நாட்டுக்கும் புதுவாழ்வை வழங்கவரும் புத்தாண்டை பூச்செண்டு கொடுத்து எமதாக்குவோம்.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
பிரதமகுரு
வல்லை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவ அன்னையின் பாதுகாப்பில் நம்பிக்கைவைத்து ஆரம்பிப்போம்

## யாழ். மறைமாவட்ட ஆயர் புதுவருட வாழ்த்துச் செய்தி



2023ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளையில், இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இந்தப் புதிய ஆண்டானது உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர்மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறேன்.

உலகக் கத்தோலிக்க திருஅவையானது ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் அந்த புதிய ஆண்டு முழுவதுக்குமான தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும், பாசமிகு பராமரிப்பையும், வல்லமை மிக்க இறை பாதுகாப்பையும் பெற செபிக்கும்படி பணித்து நிற்கிறது.

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்; (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறைசித்தத்தை ஏற்று பல இன்ப துன்ப அனுபவங்கள் வழி தன் அர்ப்பண வாழ்வை வாழ்ந்து இறைவனின் தாயாகவும் இறைமக்களின் தாயாகவும் விளங்கும் பாக்கியம் பெற்றார். இன்று உலக மக்கள் அனைவரையும் தன் அன்பு மக்களாக அரவணைத்துப் பாதுகாத்துப் பாரமரித்து வருகிறாள்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஆண்டு பல இன்பமான அனுபவங்கள் வழியும், பல துன்பமான அனுபவங்கள் வழியும் எம்மை அழைத்துச் சென்று தன் பயணத்தை முடித்து எம்மை விட்டுக் கடந்து சென்றுவிட்டது. மலர்கின்ற 2023ஆம் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும், இனியதாய் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. 2023ஆம் ஆண்டை தேவ அன்னையின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து தொடங்குங்கள். இந்தப் புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை தன் தாய்க்குரிய அன்போடும் பாசத்தோடும் எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கை உங்கள் மனதில் நிறைந்திருக்கட்டும்.

**கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**


அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS


2023 Happy New Year!

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு 0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578 / 7678
070 301 3011

கிளைக் காரியாலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி |
| T.P: 021 224 3393 | T.P: 021 225 2333 | T.P: 021 225 1664 | T.P: 021 227 0616 |
| 070 301 3014 | 071 255 4135 | 070 301 3016 | 071 577 0616 |
| 077 343 6622 | 077 434 3798 | 077 434 3149 | 077 435 3995 |
| யாழ் மத்தி (Town) | நெல்லியடி | புன்னாலைக்கட்டுவன் | காரைநகர் |
| T.P: 021 222 8004 | T.P: 021 226 0999 | T.P: 021 224 5001 | T.P: 021 225 2454 |
| 070 301 5004 | 071 775 0999 | 076 384 0684 | 070 510 2484 |
| 070 301 3017 | 077 261 2446 | வேலணை : | |
| 077 998 6247 | | T.P: 021 221 5472, 070 301 3012, 077 3689 319 | |

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

2023 Happy New Year!

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய
தரம் குன்றாத தங்க ஆபரணங்களை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்




74 பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. 021 226 4465 077 873 3482


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 80 ஆவது பிறந்தநாள்

## ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியன் செல்வன்)



மண்ணில்
01.01.1943

மண்ணுள்
20.05.2005

ஒவ்வொரு வருடமும் மலரும்
பூ கோலங்கள் போல
எழுத்தாற்றல் கொண்ட
எழுத்தாளர் மலர வேண்டும்
தமிழ் எழுத்துக்களைக் கோர்த்து
புதுமையான காவியங்கள் படைத்தீர்
ஒவ்வொரு வருடமும் உங்கள் நினைவாக
ஞானத்தில் பல எழுத்தாளர்கள்
உதிப்பார்கள்

10 புதுவீதி அத்தியடி,
யாழ்ப்பாணம்.

புவனம்,
இராகுலன்.

## ஆங்கில வகுப்பு

பாடசாலை மாணவர்கள் மற்றும் அடிப்படையில் இருந்து ஆங்கிலம் கற்க ஆர்வமுள்ளவர்கள் அனைவருக்கும் மிக துல்லியமாக கற்பிக்கப்படும். கணிதம்- தமிழ்/ ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0761124145

## உடனடி வேலை வாய்ப்பு

பகுதிநேர/ முழுநேர வேலைவாய்ப்பு- காப்புறுதித்துறை, சந்தைப்படுத்தல் துறையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்- காரியாலய வேலை வாய்ப்பு உள்ளது.

தொடர்பு: 0761124145

## தரோசோ வேலைகள்

சிறந்த முறையில்
தரோசோ வேலைகள்
மாபிள் வேலைகள்
செய்துதரப்படும்.

076 429 3415

## காணி விற்பனைக்கு

களுபோவில வைத்தியசாலை
வீதியினை முகப்பாக கொண்ட 9.5p
காணி விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு
கொள்ளவும்

077 427 1404

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக்கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

1 சதுர அடி 130/= இல் இருந்து

எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள்

உலகத்தரமிக்கது
வடமாகாணத்தில் முதன் முதலில்
12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்

FINEX இரசாயனப் பொருள்களை 5% விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177,
077 232 3000

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதன ஒருங்கிணைப்பும் பெயர்மாற்றமும்

சாவகச்சேரி நகராட்சி ஆளுகைக்குட்பட்ட வட்டாரம்: 09. கண்டி வீதி.203.205 மற்றும் 205A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களை உடைய ஆதனம் ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கம் என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட தாய் உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி. விசுவநாதர் முருகப்பர் பிரசித்த நொத்தாரிஸ் சின்னத்தம்பி கந்தர் முகதாவில் 1920.06.24 ஆம் திகதியிடப்பட்ட 12526 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் தென்கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஆறு (06). ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி வைத்திலிங்கம் அருணாசலம் நமசிவாயம் பிரசித்த நொத்தாரிஸ் S.K.திரவியநாயகம் முகதாவில் 29.03.1942 ஆம் திகதியிடப்பட்ட 131 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடகிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஐந்து (05) இதில் சொரியலாய் அரைவாசி (1/2) ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி தெற்கு வைத்திலிங்கம் முத்துக்குமாரு பிரசித்த நொத்தாரிஸ் S.K.திரவியநாயகம் முகதாவில் 18.11.1942 ஆம் திகதியிடப்பட்ட 225 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 71/2 இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு நான்கு (04). ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் பிரசித்த நொத்தாரிஸ் அமிதா அமரசேன முகதாவில் 03.11.2011ஆம் திகதியிடப்பட்ட 911 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் MARY THIRAVIAM VISVALINGAM என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135A USTRALTA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் என்பவர் NO 25, FIRST LANE, RATMALANAI, PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் அமிதா அமரசேன முகதாவில் 31.05.2022ஆம் திகதியிடப்பட்ட அற்றோனித்தத்துவம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் என்பவர் அற்றோனித்தத்துவக்காரனான NO 25, FIRST LANE, RATMALANAI. PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் திரு. அருட்பிரகாசம் நிறோஷன் முகதாவில் 08.07.2022 ஆம் திகதியிடப்பட்ட 311 ஆம் இலக்கத்தில் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/ 2 இதில் தென்கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஆறு (06). ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடகிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஐந்து (05) இதில் சொரியலாய் அரைவாசி (1/2). ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/ 2 இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு நான்கு (04) என திருத்தல் சாதனம் உறுதி மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம்: என்பவர் அற்றோனித்தத்துவக்காரனான NO 25, FIRST LANE, RATMALANAI, PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் திரு. அருட்பிரகாசம் நிறோஷன் முகதாவில் 08.07.2022ஆம் திகதியிடப்பட்ட 312 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இராஜேந்திரன் இராஜ்குமார் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று- சாவகச்சேரி இறை."காட்டுக்காணி" நிலப்பரப்பு பன்னிரெண்டரை (12 1/2). இவ் ஆதனம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. R.இராஜகோபாலு அவர்களால் 2022.04.28ம் திகதியன்று 1099ம் இலக்க அளவைப்படத்தின்படி துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு பதினொன்று (11) குளி பதினாறு தசம் பூச்சியம் ஆறு (16.06). இதற்கு எல்லைகள்.

வடக்கு : முத்துக்குமாரு சிறீதரன் மற்றும் ஏனையவர்களின் ஆதனம் மற்றும் காளி கோவிலின் கட்டடம்
கிழக்கு: யாழ்ப்பாணம் கண்டி வீதி
தெற்கு : தென்மராட்சி பிரதேச செயலகம்
மேற்கு : முத்துக்குமாரு சிறீதரனின் ஆதனம்.

இவ்வாதனம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்ற தத்துவம் 224 என்ற வழக்கில் 87.01.06ஆம் திகதியன்று நிர்வாகப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கேவியற் தடை சாதன வுச்சட்டத்தின் பகுதி 32இன் பதிவின்படி இல 38, முகந்திரம் வீதி, கொழும்பு 03 ஐச் சேர்ந்த ந்ததேவி தனராஜ் (596031730V) என்பவராலும் இல 143/14, காலி வீதி, கொழும்பு 03 ஐச் சேர்ந்த நந்தாதேவி சரவணபாலன் (688323916V) என்பவரால் 2020.07.06 இலிருந்து இரண்டு டங்களுக்கு அமுலில் இருக்கும்படி தடை செய்யப்பட்டுள்ளது.


போது இராஜேந்திரன் இராஜ்குமார் இவ்வாதனத்தை ஆதன உபபிரிவிடலும் ஆதனப்பெயர்மாற்றமும் ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க ப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ வணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள வினர்களூடாக ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் குறித்த ஆதனத்திற்கு உபபிரிவிடலும் ஆதனப்பெயர்மாற்றமும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். உபபிரிவிடல் மற்றும் ஆதனப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் ராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விசாளர்,
ராட்சி மன்றம்,
வகச்சேரி.

## துயர் பகிர்கின்றோம்

### யோகானந்தசிவம் சேந்தன்

(இணைந்த கணித பாட ஆசிரியர் மட் / வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை)



தோற்றம் 17.02.1973
மறைவு 30.12.2022

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக்
- கலங்குகின்றோம்

பிரிவால்துயருறும்
92 Batch இலங்கை நண்பர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07.05.1937
மறைவு 02.12.2022

### அமரர் வேலுப்பிள்ளை நடராசா (விதானையார்)


நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செம்மத்தி,
நீர்வேலி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ICE FACTORY LAND
FOR SALE
IN GURUNAGAR, JAFFNA
FISHING VILLAGE
EXTENT 1.5 LARCHAM (15 PURCHES)
POWER AND WATER SUPPLY AVAILABLE
PLEASE CALL- 077 2078 455







# புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.




காத்திருந்து காய் நகர்த்துவதில் வல்லவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது, 2023 புத்தாண்டு பிறப்பதால் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணவரவு கணிசமாக உயரும். சூரியனும், புதனும் சாதகமாக லாப வீட்டில் அமர்ந்திருக்கும் போது புத்தாண்டு பிறப்பதால் சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும்.

குருபகவான் 22.04.2023 வரை உங்கள் ராசிக்கு 2இல் இருப்பதால், பணப்புழக்கம் அதிகரிக்கும், செலவுகளும் உண்டு. குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வாரிசு இல்லையே என வருந்திய தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

குருபகவான் 23.04.2023 முதல் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்வதால் சில காரியங்களில் அலைச்சலும் சிரமமும் இருக்கும். புதிதாக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

8.10.2023 வரை உங்கள் ராசிக்கு 9இல் கேது நிற்பதால் தந்தைக்கு மருத்துவச் செலவுகளும், அவருடன் வீண் விவாதங்களும் வந்து போகும். 3ஆம் வீட்டில் ராகு இருப்பதால் துணிச்சல் பிறக்கும். எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் வரும்.

9.10.2023 முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 2இல் ராகுவும், 8ஆம் வீட்டில் கேதுவும் தொடர்வதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கும், அலைச்சல் அதிகரிக்கும். பேச்சில் கடுமை காட்டாதீர்கள். மற்றவர்கள் விவகாரத்தில் தலையிடவேண்டாம்.

ஆண்டு தொடக்கத்தில் விரயச் சனி தொடர்வதால் வருங்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும்.

29.03.2023 முதல் 23.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு ஜன்மச் சனியாக அமர்வதால், வீண்விரயம், விரக்தி, ஏமாற்றம், காரியத்தடை வந்து நீங்கும். போலிப் புகழ்ச்சிக்கும் மயங்காதீர்கள்.

வியாபாரிகளே! வருட முற்பகுதியில் லாபம் அதிகரிக்கும். என்றாலும் பெரிய முதலீடு களைத் தவிர்க்கவும்.

உத்தியோகஸ்தர்களே! ஏப்ரல் மாதம் வரை குரு சாதகமாக இருப்பதால் அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு தொடக்கத்தில் முன்னேற்றம் தருவதாகவும், மத்தியப் பகுதியில் இருந்து அலைச்சலும் ஆதாயமும் தருவதாகவும் அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**

யாழ்.நகரில் வீட்டில் தங்கிநின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை

தொடர்பு: 077 0250339



**கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை உரிமையாளர் - நல்லையா உதயகுமார் (பெரியதம்பி) கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இரண்டாம் (2) இலக்க கடையில் இயங்குகின்றது** என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.


**ஆரம்பம்: 01.01.2023**

**தொ.பே.: 077 085 6479**

(cs 22482) (2.6)


## நினைவஞ்சலி

(01.01.2023)



மறைவு 01 . 01 . 1985

மறைவு 24 . 04 . 1987

**திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்**

(6/1 மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்)

(சிறைச்சாலைகள் முன்னை நாள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை / போஹம்பரை / யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


**புதுவருடக் கொண்டாட்டம்**
**இன்று 3:1 இலவசம்**

கோழிப்புக்கை, நாசி

YouTube Yarlpardy

51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

+9421 222 6868, +94777 340 026

**காணி, தென்னங்கன்று விற்பனைக்கு**

- யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட A.V. றோட்டில் 5 பரப்பு வெற்றுக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 16 லட்சம்) யூரியா -20000
- வருட இறுதி விழாக்களை முன்னிட்டு 3.5 வருட தரமான தென்னங்கன்றுகள் மலிவான விலைக்கு உண்டு.

076 219 5666, 070 566 8015

**கடைகள் வாடகைக்கு**

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் தரைமாடியில் ஒரு கடையும், மாடியில் இரு கடைகளும் வாடகைக்குண்டு.

077 363 6129, 077 620 5628

Toyota Land cruiser prado 2015

**விற்பனைக்கு**

Model : TX150

வாகன இல : CBD -XXX

தொடர்புகளுக்கு - 076 226 9153

**The Royal College of Jaffna**

பிரான்பற்று வீதி, சங்கானை (பழைய மீன் சந்தை அருகில்)

சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார் Diploma in English and Science (London)

Tel: 0776751649


## போதைப்பொருள்...

தந்தை இல்லாத நிலையில் தனது அரவணைப்பில் மகனைத் தாயார் கஷ்டப்பட்டு வளர்த்துள்ளார். இளைஞன் சில மாதங்களாக உயிர்கொல்லிப் போதைப்பொருள்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார். அதற்கு அடிமையான நிலையில், வீட்டிலிருந்த பொருள்களை ஒவ்வொன்றாக விற்பனை செய்தும், அடமானம் வைத்தும் உயிர்கொல்லி போதைப்பொருளை பயன்படுத்தியுள்ளார். தாயின் மோதிரத்தை தருமாறும் இளைஞன் வற்புறுத்திய நிலையிலேயே, அவர் பொலிஸில் மகனை கையளித்துள்ளார்.

இளைஞன் நேற்றுமுன்தினம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். மருத்துவப்பரிசோதனைகளில் அவர் உயிர்கொல்லிப் போதைப்பொருள் பயன்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (அ-ஓ-19)


இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், ஆசிரியர், வங்கியியலாளர், தனியார் துறையினர், உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்களும் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்

077 1387596, 071 9999306, 021 222 9306

**முகாமையாளர் தேவை**

கிளிநொச்சியில் அனுமதிபெற்ற Luxury Hotel மற்றும் திருமண மண்டபம் ஒன்றுக்கு முகாமையாளர் (Development Manager) உடன் தேவை.
மிகவும் கவர்ச்சிகரமான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
மேலதிக கவர்ச்சிகரமான சலுகைகளும் உண்டு.
மும்மொழித் தேர்ச்சியும் கணினி அறிவும் இதே துறையில் முன் அனுபவமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு- 077 2779882

**புதிய வீடு வாடகைக்கு**


யாழ். கலைப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் 2 நிமிட நடை தூரத்தில் குமாரசாமி வீதியில் 2 மாடி வீடுகள் வாடகைக்கு. Ground Floor, 1st Floor (3 bed room, 2 Bathroom, Hall, Kitchen & Car Parking Seperate Entrance. (CS 22447)(3/6)

074 175 8267, 077 770 8125
+16478220973 (Whatsapp)


# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் S.K. தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)



தோற்றம் 01.01.1943

மறைவு 01.01.2009

வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம்-அப்பா
இருந்தும் மனம் ஏற்குதில்லை அப்பா
நிஜமாக நீங்கள் மறைந்து
பதின்நான்கு ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம்தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் அப்பா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
தன்னை, களபூமி, காரைநகர்,
தற்காலிக முகவரி:
இல.58, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
077 183 6625

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த வருடமாவது மீட்சி கிடைக்கட்டும்



## வாழ்த்துச் செய்தியில் சரவணபவன்

கொழும்பு, ஜன. 1

போர்ப்பாதிப்பிலிருந்து மீள்வதற்கிடையில், பொருளாதார நெருக்கடியையும் எமது சமூகம் எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடிகள் எல்லாவற்றிலிருந்தும் பிறக்கின்ற புத்தாண்டில் மீட்சி கிடைக்கவேண்டும் என்று தனது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் தமிழ்அரசுக்கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

அவரது வாழ்த்துச் செய்தியில்,

கடந்த இரண்டு ஆண்டுகளும் எமக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. கொரோனாப் பெருந்தொற்று 2021ஆம் ஆண்டையும், பொருளாதார நெருக்கடி 2022 ஆம் ஆண்டையும் பாதித்துள்ளன. போரால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தை இந்தப் பாதிப்புக்கள் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஓர் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அத்தனை செயற்பாடுகளும் அந்த ஆண்டு முடியும்போது முடிந்துவிடுவதில்லை. மழை விட்டாலும் தூவானம் தொடர்வதைப்போல் கடந்த ஆண்டின் தாக்கம் இந்த ஆண்டிலும் இருக்கத்தான் செய்யும், அதுதான் யதார்த்தம்.

அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக ஒரு திருப்பமாக இந்த ஆண்டு அமைந்திடவேண்டும் என்பதுதான் என் பெருவிருப்பமாகவுள்ளது.

அரசியல் தீர்வுக்கான முயற்சி இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அது வெற்றிபெறவேண்டும். தமிழர்கள் விரும்பும் நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். பொருளாதார எழுச்சியையும் பெறவேண்டும். புத்தாண்டில் அது நடக்க வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## புத்தாண்டில்...

அரசாங்கம் ஆரம்பித்துள்ள சர்வகட்சி பேச்சுத் தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்கள், போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தப்பிக்கவைக்கும் வகையில் குறிப்பிட்ட சில ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வருவதுபோல், அரசாங்கம் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான சர்வகட்சி பேச்சு தொடர்பிலும் முரண்பட்ட தகவல்களை சில ஊடகங்கள் வெளியிடுகின்றன. நாட்டு மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் பயணத்தில் இப்படியான ஆரோக்கியமற்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் குறிப்பிட்ட ஊடகங்களிடம் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. இதை மட்டுமே என்னால் இப்போது கூறமுடியும். அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை விரைந்து எடுக்குமாறு கடந்த சந்திப்பில் கூறிவிட்டேன் - என்றார். (அ-ஒ-5-22)

## சர்வகட்சி...

சர்வகட்சிக் கூட்டம் எப்போது இனி இடம்பெறும் என்பது தொடர்பில் நாளை அல்லது நாளை மறுதினம் கட்சித் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'சர்வகட்சித் தலைவர்களுக்கு கூட்டம் தொடர்பான திகதி நாளை அல்லது நாளை மறுதினமே அறிவிக்கப்படும். இதேவேளை- தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை நான் பிரத்தியேகமாகச் சந்திப்பேன். அவை எனது தனிப்பட்ட சந்திப்பாக இருக்கும். இந்தச் சந்திப்புக்களில் துறைசார் அமைச்சர்கள், பொறுப்பான அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்' என்று ரணில் குறிப்பிட்டார். (அ-ஒ-5-22)

## வீட்டுக்கிருத்திய...

வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குபற்றுபவர்களுக்கு மரக்கன்றுகள், நினைவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வரும் சூழலில், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உலர் உணவுப் பொருள்களை வழங்கி முன்மாதிரியான செயற்பாட்டை சாவகச்சேரியில் ஒரு குடும்பத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி உயிரிழந்த பெண்ணொருவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு மட்டுவிலில் நேற்று நடைபெற்றது. இதில் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அனைவருக்கும் உலர் உணவுப் பொதி குடும்பத்தவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

நினைவுதின நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு கல்வெட்டு, எவர்சில்வர் பொருள்கள், மரக்கன்றுகள் வழங்குவதற்குப் பதிலாக தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் இவ்வாறான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கியமை குறித்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பாராட்டுத் தெரிவித்தனர். (அ-ஒ-9)

## சந்தேகநபர்...

பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபரை நேற்றுக் கைது செய்ததாக ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப் பகுதியில் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவம் தொடர்பில் ஏற்கனவே துன்னாலை மற்றும் கரவெட்டி பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய புலோலி - மந்திகையைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர், வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றதன்பின்னர் கொழும்புக்கு வந்து தொழில் புரிந்து வந்துள்ளார். இந்நிலையில், கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர் கொழும்பு -ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

## இரு தமிழ்ப்...

அத்துடன் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தும் காணொலியை எடுத்து அதனை வைத்து மிரட்டி தொடர்ச்சியாக அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்து 17 வயதான சிறுமியை இரண்டு தமிழ்ப் பொலிஸார் அழைத்துச் சென்று, யாரும் இல்லாத வீட்டில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். அதனைக் காணொலிப் பதிவு செய்து கடந்த இரண்டு ஆண்டுகளாக அதனைக் காண்பித்து அச்சுறுத்தி தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை குறித்த சிறுமி (தற்போது 19 வயது) திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையிலும் வழங்கப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலும், அவர் இரண்டு வருடங்களாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

பிரதான சந்தேகநபரான தமிழ்ப்பொலிஸ் உத்தியோகத்தர், சம்பவம் நடைபெறும் போது வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும் பின்பு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும், தற்போது முருங்கன் பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றி வருகிறார் எனத் தெரியவருகின்றது.

சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய காணொலியை பாடசாலை மாணவர்களுக்கும் சந்தேகநபர்களான பொலிஸார் அனுப்பியுள்ளதாகவும், பாடசாலை மாணவர்களும் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு கேட்டபோது; 'சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது' - என்றார். (அ-ஒ-5-125)

## தீர்வுக்கான...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிறக்கின்ற புத்தாண்டு தமிழ் மக்களுக்கு தீர்க்ககரமான முடிவுகளை எடுக்கக் கூடிய ஆண்டு. தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதற்கான பேச்சும் ஜனாதிபதி ரணிலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாம் விரும்பும் திருப்திகரமான தீர்வை இந்த அரசாங்கம் முன்வைக்காவிடின் அந்தத் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம். எனவே தமிழர்களின் கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு அரசியல் தீர்வை விரைந்து இந்த அரசு காணவேண்டும். இல்லையேல் நாம் தீர்க்ககரமான முடிவுகளை எடுப்போம். எம் பக்கம் இருக்கின்ற சர்வதேச நாடுகளுடன் கலந்தாலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ-ஒ-5-22)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில்**
**30 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
  நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
  ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- **பார்வையிடும் நேரம்:-** காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம் 077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில்**
**12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம் 077 24 17 589**
**077 02 67 619**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Techna
## Technical Institute
### A/L தொழினுட்பப்பிரிவு

Smart thinking leads to innovate

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

technatechnicalinsititute@gmail.com
Techna Technical Institute

## A/L 2021 உயர்தரப் பரீட்சையில் தொழினுட்பப்பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான எமது மாணவர்கள்

### பொறியியல் தொழினுட்பவியல் பிரிவு



- ச.விதுஷன் (3A) (மாவட்ட நிலை - 02, தேசியநிலை - 056) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- க.விதுஷன் (2A B) (மாவட்ட நிலை - 03, தேசியநிலை - 112) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- ப.கவிதன் (2A B) (மாவட்ட நிலை - 05, தேசியநிலை - 207) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- ச.ஆரூரன் (A 2B) (மாவட்ட நிலை - 07, தேசியநிலை - 296) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- த.ஜமோகாந்த் (2B C) (மாவட்ட நிலை - 18, தேசியநிலை - 788) வயம்ப பல்கலைக்கழகம்
- த.டெல்சன் (2B C) (மாவட்ட நிலை - 20, தேசியநிலை - 930) வயம்ப பல்கலைக்கழகம்
- கு.மதுசன் (2B C) (மாவட்ட நிலை - 25, தேசியநிலை - 1347) வவுனியா பல்கலைக்கழகம்



- சா.சாரங்கன் (A B C) (மாவட்ட நிலை - 33, தேசியநிலை - 675) வவுனியா பல்கலைக்கழகம்
- ர.டிந்துசன் (2B C) (மாவட்ட நிலை - 36, தேசியநிலை - 2015) ரஜரட்ட பல்கலைக்கழகம்
- செ.பிரியதர்சன் (A B S) (மாவட்ட நிலை - 38, தேசியநிலை - 2053) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- க.ஹரிகிஷோர் (B 2C) (மாவட்ட நிலை - 40, தேசியநிலை - 2186) வவுனியா பல்கலைக்கழகம்
- ம.கஜந்தன் (2B S) (மாவட்ட நிலை - 41, தேசியநிலை - 2211) ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்
- அ.சாரங்கன் (2B C) (மாவட்ட நிலை - 45, தேசியநிலை - 2358) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- ச.கபில்காந்தன் (B 2C) (மாவட்ட நிலை - 49, தேசியநிலை - 2457) வவுனியா பல்கலைக்கழகம்




- ஜெ.லக்சிகா (B 2C) (மாவட்ட நிலை - 50, தேசியநிலை - 2531) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- கி.றெஜ்சிகா (B 2C) (மாவட்ட நிலை - 51, தேசியநிலை - 2535) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- த.நிலாவினி (2B C) (மாவட்ட நிலை - 03, தேசியநிலை - 2112) வவுனியா பல்கலைக்கழகம்
- வி.சாருகன் (B 2C) (மாவட்ட நிலை - 05, தேசியநிலை - 2652) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- ச.தர்சிகன் (3B) (மாவட்ட நிலை - 10, தேசியநிலை - 5381) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- த.கிருஷ்ணா (C 2S) (மாவட்ட நிலை - 06, தேசியநிலை - 5953) வவுனியா பல்கலைக்கழகம்
- ம.ராகுலன் (2A C) (மாவட்ட நிலை - 08, தேசியநிலை - 570) கொழும்பு பல்கலைக்கழகம்




- ஜோ.ஷரின் அனி (3C) (மாவட்ட நிலை - 08, தேசியநிலை - 2906) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- ச.புவேந்தினிகா (B C S) (மாவட்ட நிலை - 09, தேசியநிலை - 3108) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- மொ.இ.ஹனான் (2B C) (மாவட்ட நிலை - 08, தேசியநிலை - 436) கொழும்பு பல்கலைக்கழகம்
- சு.ஸ்ரீ ரஜிதா (A 2B) (மாவட்ட நிலை - 08 தேசியநிலை - 509) களனி பல்கலைக்கழகம்
- கு.சத்தியவாணி (3C) (மாவட்ட நிலை - 71, தேசியநிலை - 2087) ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்
- ஹமீதா சனோஃவர் (A 2B) (மாவட்ட நிலை - 13, தேசியநிலை - 675) ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்
- ஆமினா (B 2C) (மாவட்ட நிலை - 34, தேசியநிலை - 1087) தென்கிழக்கு பல்கலைக்கழகம்

### உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் பிரிவு



- கி.மைந்திகா (3B) (மாவட்ட நிலை - 11 , தேசியநிலை - 457) வயம்ப பல்கலைக்கழகம்
- ச.கம்ஷா (A B C) (மாவட்ட நிலை - 03, தேசியநிலை - 112) ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ர.கஜானா (A 2C) (மாவட்ட நிலை - 05, தேசியநிலை - 207) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- பா.திவ்யா (A 2C) (மாவட்ட நிலை - 07, தேசியநிலை - 296) ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்
- வி.திலக்ஷனா (B 2C) (மாவட்ட நிலை - 18, தேசியநிலை - 788) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- செ.கேதுஷா (2B C) (மாவட்ட நிலை - 20, தேசியநிலை - 930) வவுனியா பல்கலைக்கழகம்
- ஜெ.தைசா (B 2C) (மாவட்ட நிலை - 25, தேசியநிலை - 1347) கிழக்கு பல்கலைக்கழகம்




- பா.அபிசாயினி (3C) (மாவட்ட நிலை - 33, தேசியநிலை - 2157) மட்டக்களப்பு பல்கலைக்கழகம்
- வி.பிரியங்கா (2C S) (மாவட்ட நிலை - 37, தேசியநிலை - 2379) தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
- மோ.விதுஷா (B 2C) (மாவட்ட நிலை - 39, தேசியநிலை - 2431) மட்டக்களப்பு பல்கலைக்கழகம்
- பு.தரணிதன் (2A B) (மாவட்ட நிலை - 02, தேசியநிலை - 299) கொழும்பு பல்கலைக்கழகம்
- அ.ஷிவானி (B 2C) (மாவட்ட நிலை - 08, தேசியநிலை - 1504) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
- ர.றஞ்சினி (3C) (மாவட்ட நிலை - 11, தேசியநிலை - 2394) சப்ரகமுவ விக்கிரமராச்சி பல்கலைக்கழகம்
- ஆ.றிஷ்னா (2B C) (மாவட்ட நிலை - 16, தேசியநிலை - 462) ரஜரட்ட பல்கலைக்கழகம்

✴ எமது ஆசிரியர் குழாம் ✴

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு

பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி

ICT
T.லவன்

புவியியல்
S.P.கரன்

விவசாய விஞ்ஞானம்
S.சஜீவன்

கணிதம்
T.சசிகரன்

மாணவர்களின் வெற்றிப்பாதையில் Techna...

- ஆய்வுகூட வசதிகளுடனான செய்முறை வகுப்புக்கள்
- தொடர்ச்சியாக 07 நாட்களும் வகுப்புகள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- பாடங்களுக்கான கையேடுகள், குறிப்புக்கள், அலகு ரீதியான வினாக்கொத்துக்கள், மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- அலகு பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் நடைபெறல்

| A/L 2024 | A/L 2023 |
| --- | --- |
| அலகு ரீதியாக அனைத்து பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து மீட்டல் மூலம் கற்பிக்கப்படும். | Theory வகுப்புக்கள் மீட்டல், வினாத்தாள் வகுப்புக்கள் |

ஆரம்பம் – 02.01.2023
மாலை 3.30மணிக்கு

077 170 3549




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஈட்டு புகழ் நந்தி பாணா! நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலும்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீஎன்றேன் நான்!

-நந்திக்கலம்பகம்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | மார்கழி 17 | ஞாயிற்றுக்கிழமை (01.01.2023) | சிகரம் : 129






பேராசிரியர் ஆசி கந்தராஜா
சிட்னி – அவுஸ்திரேலியா


# சீன நாட்டு அரிசியும் பிளாஸ்டிக் சலசலப்பும்





பிளாஸ்டிக்கில் அரிசி செய்வது சாத்தியமா? பிளாஸ்டிக் அரிசி, உண்மையான அரிசிபோல கொதி தண்ணீரில் வேகுமா? என்ற பல கேள்விகள் எமக்குள் எழுந்தாலும் பிளாஸ்டிக் என்றவுடன் எமக்குள் ஒருவித பயம் ஏற்படவே செய்கிறது. 'பிளாஸ்டிக் அரிசி' பற்றிய பல யூடியூப் வீடியோக்களும் தகவல்களும் அண்மைக் காலமாக ஊடகங்களிலும் வலைத் தளங்களிலும் வெளிவந்துள்ளன. சமீபத்தில் நான் பார்த்த, சீன மொழியில் விளக்கம் சொல்லும், ஒரு யூடியூப் வீடியோவின் முதலாவது காட்சியில், மெல்லிய பிளாஸ்டிக் தகடுகள் இயந்திரம் ஒன்றுக்குள் போடப்படுகிறது. அடுத்து நூல்கள் போன்ற அமைப்பு ஓர் இயந்திரத்திலிருந்து இன்னொரு இயந்திரத்துக்குப் போவது காண்பிக்கப்படுகிறது. மூன்றாவது காட்சியில் இயந்திரத்திலிருந்து அரிசி வெளியேறுகிறது. ஆனால் இந்த மூன்று காட்சிகளுக்குமான தொடர்புகள் எதுவும் அங்கு காட்டப்படவில்லை.

பிளாஸ்டிக் அரிசி, சந்தைக்கு வந்திருப்பதாகச் சொல்வது முற்றிலும் புரளிக் கதை. 2011ஆம் ஆண்டு வியட்நாமிய இணையப் பத்திரிகை ஒன்றுதான் முதன்முதலில் பிளாஸ்டிக் அரிசி சந்தைக்கு வந்திருப்பதாகவும், அது சீனாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் செய்தி வெளியிட்டது. அதன் பின்னர், பிளாஸ்டிக் அரிசி குறித்து வெளிவந்த செய்திகள் அனைத்துமே வியட்நாமிய இணையப் பத்திரிகை வெளியிட்ட செய்தியைச் சார்ந்தே இருந்தன.

சீனாவில் வுச்சாங் என்னும் இடத்தில் விளையும் அரசி மிகப் பிரபல்யமானது. இது நல்ல சுவையும் மணமும் கொண்டது. இந்த அரிசி அவியும்போது வெளிவரும் வாசனை பசியைத் தூண்டும் என்றும் சொல்லப்படுகிறது. வுச்சாங் அரிசி, அதிக விலையானதால், வியாபாரிகள் கலப்படம் செய்வதாகவும் அதனுடன் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட போலி அரிசியை கலப்பதாகவும் வியட்நாமிய பத்திரிகை மேலும் தெரிவித்தது. இந்தக் கலப்பட அரிசியானது உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு போன்ற மாச்சத்துள்ள கிழங்குகளை அரைத்து, அரிசி போன்று செய்யப்படுவதாகவும் இரசாயனங்களைப் பூசி அவை விற்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது. சீனாவின் புகழ்பெற்ற 'வுச்சாங்' ரக அரிசியைப் போன்று தோற்றமளிக்க கலப்பட ரக அரிசிகளில் வாசனைத் திரவங்கள் தெளிக்கப்படுவதாகவும் பின்னர் செய்திகள் வெளிவந்தன. ஆனால் எந்தச் செய்தியிலும் நேரடியாக பிளாஸ்டிக் கலக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

பிளாஸ்டிக்கை அரைத்து அரிசிகளின் அச்சுகளாக மாற்றுவதன் மூலம் எந்தவொரு வணிக இலாபமும் பெற்றுவிடமுடியாது. கலப்படம் செய்யப்படுவது இலாப நோக்கத்திற்காக மட்டும்தான். ஒரு கிலோ அரிசியைவிட ஒரு கிலோ பிளாஸ்டிக்கின் விலை அதிகம் என்பதால் வியாபாரிகள் இதில் எந்தவித இலாபத்தையும் பெற முடியாது. அதுமட்டுமல்ல அரிசியில் பிளாஸ்டிக்கை கலந்தால் உலை கொதிக்கும்போது அல்லது அரிசி அவியும்போது பிளாஸ்டிக் உருகி விடுமல்லவா?

நாம் உண்ணும் பலவிதமான உணவுகளில் கலப்படம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. சில துரித உணவுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், குறித்த வடிவம் பெறுவதற்கும், கெட்டுப்போகாமல் இருப்பதற்கும் நெகிழ்வுத் தன்மையுள்ள சில வேதிப் பொருள்கள் கலக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால், ஒட்டுமொத்தமாக பிளாஸ்டிக்கைக் கொண்டு வாளி, கோப்பை, கதிரை, மேசை செய்வது போல, அரிசி தயாரிப்பது சாத்தியமில்லை. இந்த மாதிரியான செய்திகளை வலைத்தளங்களில் பதிவேற்றுகையில், ஆதாரமும், உண்மைத் தன்மையும் தெரிந்தால் மட்டுமே பகிரவேண்டும். இதுகுறித்த வீடியோக்கள் பெரும்பாலும் புரியாத மொழிகளிலேயே முதலில் வெளிவந்தன. இன்றுவரையும் நிரூபிக்கப்படாத இந்தச் செய்திகள் அனைவரையும் அச்சுறுத்தும் வதந்திகளாகவே பல மொழிகளில் பரவி வருகின்றன. அறிவு பூர்வமாக நிரூபிக்கப்படாத வரையில் இதுபோன்ற செய்திகளை மக்கள் நம்பாமல் இருக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் திடீர் நூடில்ஸ் போன்று திடீர் அரிசிப் பைகள் விற்கப்படுகின்றன. அந்த அரிசிப் பையை கொதி தண்ணீரில் போட்டால் சில நிமிடங்களுக்குள் பைக்குள் இருக்கும் அரிசி அவிந்து சோறாகிவிடும்.

ஆனால் இது இயற்கையான அரிசி இல்லை. சரியாகச் சொன்னால் இது நூடில்ஸ் அரிசி. சவ்வரிசியைப் போன்றது. நெல்லை அரிசியாக்கும் போது பெருமளவு குருணை வரும். இதை விற்க முடியாது. இதை அரைத்து பசையுள்ள சில மா வகைகளைச் சேர்த்து நூடில்ஸ் போன்று அரிசி தயாரிக்கிறார்கள். இதிலும் பிளாஸ்டிக் சேர்ப்பதில்லை. இந்த அரிசியின் விலை இயற்கை அரிசியிலும் பல மடங்கு அதிகம். இது அவசர உலகத்தில் வாழும் சிலருக்கு அவ்வப்போது உதவலாம். ஆனால் அன்றாடம் அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்கு தோதுப்படாது.


அரிசியில் இயற்கையாகவே அமைலோஸ் (இனிப்புத்தன்மை), அமைலோஸ்பெக்ரின் (பசைத்தன்மை) என்ற இரண்டு வேதிப் பொருள்கள் உள்ளன. இற்றின் அளவுக்கேற்றபடியே அரிசியின் தன்மை மாறுபடும். குச்சிகளால் சாப்பிடும் சீனர்களுக்கு பசைத் தன்மையுள்ள சோறு வேண்டும். இந்தியர்களுக்கு உதிர்ந்த சோறு வேண்டும். இதனால் ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் ஸ்டிக்கி ரைஸ் எனப்படும் இயல்பிலேயே ஒட்டும் தன்மையுடைய அரிசி வகைகள் பயிரிடப்படுகின்றன. இந்தவகை அரிசியில் அமைலோஸ்பெக்ரின் கூடுதலாக இருப்பதால், அதன் கஞ்சியில் நெகிழ்வுத் தன்மையும் பசைத் தன்மையும் அதிகம் இருக்கும். இதனால்தான் நம்மவர்கள் இதை போஸ்டர் ஒட்டப் பாவிப்பது.

சீன அரிசியை, நாட்டரிசி (குத்தரிசி) போன்று நிறைய தண்ணிவிட்டு அவித்தால் அது குழைந்து விடும். பஸ்மதி அரிசி போன்று உவிக்கவேண்டும். சோறு சமைக்கும் பாத்திரத்தில், அரிசி மட்டத்துக்கு மேலே 1 சென்ரிமீற்றர் அளவு (உயரத்துக்கு) தண்ணிவிட்டு உவித்துப்பாருங்கள். அற்புதமாக வரும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ அகற்ற ரணில் வகுக்கும் வியூகம்



## இந்தியாவைக் கடந்து அமெரிக்க – சீன அரசுகளுடன் உறவைப் பேணும் உத்தி

○ அ.நிக்ஸன்

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கம் செய்து இந்தியத் தலையீட்டை இல்லாமல் செய்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான நோக்கம். தற்போது புதுடில்லியில் இலங்கைக்கான தூதுவராக அமைச்சரவை அந்தஸ்துடன் பதவி வகிக்கும் முன்னாள் அமைச்சர் மிலிந்த கொறகொட , '13' ஐ இலங்கை அரசியல் யாப்பில் இருந்து அகற்றுவதற்கான திட்டங்களை வகுத்து வருகிறார் என்பதை அவரின் சமீபகால அணுகு முறைகள் காண்பிக்கின்றன.

மிலிந்த மொறகொட 2002 சமாதானப் பேச்சுக்காலத்தில் எவ்வாறு ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையைத் தரமிறக்கும் நகர்வுகளில் ரணிலுக்கு விசுவாசமாக ஈடுபட்டாரோ, அதனையும்விட கோத்தாபய ராஜபக்ச , மிலிந்த மொறகொட மீது அதீத நம்பிக்கை வைத்துச் செயற்பட்டிருந்தார்.

அதாவது 2009 இல் போரை ஆயுதரீதியாக வெற்றிகொண்டது போன்று அரசியல் ரீதியாக அதுவும் சர்வதேச அரங்கில் இருந்து ஈழத்தமிழர் விவகாரத்தை முற்றாக நீக்கம் செய்ய மிலிந்த மொறொகொட, சுவிட்ஸர்லாந்தில் தூதுவராகப் பதவி வகிக்கும் சி.ஏ.பிரேமச்சந்திர ஆகியோரை கோத்தாபய நம்பியது போன்று தற்போது ரணிலும் இவர்களை நம்புகிறார்.

ஏறத்தாழ கோத்தாபய வகுத்த வியூகமே இது. 'மைக் பொம்பியோ' அமெரிக்க வெளியுறவுச் செயலாளராகப் பதவி வகித்திருந்தபோதே, இந்தியாவைக் கடந்து அமெரிக்காவுடன் உறவைப் பேணும் உத்தி வகுக்கப்பட்டிருந்தது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சர்வதேசப் பயங்கரவாதத் தடுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு கோத்தாபயவுக்கும் ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்த பேராசிரியர் றொஹான் குணரட்ண, மிலிந்த மொறகொட, சி.ஏ.பிரேமச்சந்திர ஆகியோர் தற்போது 13 ஐ நீக்கும் விடயத்தில் குறிப்பாக இந்தியத் தலையீட்டைத் தவிர்க்கும் உத்திகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வகுத்துக் கொடுக்கிறார்.

இதனை மூத்த இராஜதந்திரியான தயான் ஜயதிலக கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலன்'ட் என்ற ஆங்கில நாளிதழில் கடந்த ஒக்ரோபர் மாதம் பதினாறாம் திகதி எழுதியுள்ள கட்டுரையில் விவரிக்கிறார்.

அதாவது ஜெனிவாவில் இந்தியா மாத்திரமே '13' ஐ வலியுறுத்தி வருகின்றது. அது ஒன்றுதான் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான தொடர்பாகவும் உள்ளது.

ஆகவே மேற்படி மூன்றுபேருடைய 13 க்கும் எதிரான நகர்வுகளைப் பயன்படுத்துவதன் ஊடாக இந்தியத் தலையீட்டை அகற்ற ரணில் முற்படுகிறார் என்ற தொனியை, தயான் ஜயதிலக தனது கட்டுரையில் வெளிப்படுத்துகிறார்.

'13' ஐ அகற்றுவது இலங்கைத்தீவுக்கு ஆரோக்கியமானதல்ல என்ற கருத்தையே அவர் கட்டுரையில் முன்வைத்து ரணிலையும் கண்டிக்கிறார்.

ஆகவே ஈழத்தமிழர் பிரச்சினைக்கு '13' தீர்வும் அல்ல; '13' ஐ அடிப்படையாகக் கொண்டு சமஷ்டி முறையை உருவாக்கவும் முடியாது. அதனால் முழுமையான சமஷ்டி முறைதான் தீர்வு என்பதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2009 க்குப் பின்னரான சூழலில் இந்தியாவுக்கு எடுத்துக் கூறியிருக்கவேண்டும். இந்திய மாநிலங்களில் ஒற்றையாட்சித் தன்மை கொண்ட சமஷ்டி ஆட்சி முறைக்கு மேலதிகமான அதிகாரங்களை உள்ளடக்கிய அரசியல்தீர்வின் அவசியத்தை இந்தியாவுக்கு ஊட்டியிருக்க வேண்டும்.

இந்தியாவில் பல இனங்கள் வாழ்வதாலும் சீனா-பாகிஸ்தான் போன்ற பெரிய நாடுகள் இந்திய எல்லையில் இருப்பதாலும் அங்கு ஒற்றையாட்சி முறையிலான சமஷ்டி ஆட்சி பொருத்தமானது. ஆனால் இலங்கைத்தீவில் வடக்கு- கிழக்கில் முழுமையான சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்தினால் மாத்திரமே ஈழத்தமிழர்கள் பாதுகாப்புடன் வாழ முடியும்.

அத்துடன் இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கும் அது பாதுகாப்பானது என்ற கருத்தியலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவுசார்ந்து வலியுறுத்தத் தவறியுள்ளது.

2015 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திரமோடி, பல தேசிய இனங்கள் வாழும் நாடுகளில் கூட்டாட்சிமுறையே சிறந்த அரசியல் தீர்வு என்று வலியுறுத்தியிருக்கிறார். மோடி இலங்கை என்று நேரடியாகக் கூறவில்லை. ஆனாலும், இலங்கை நாடாளுமன்றத்திற்குள் நின்றுகொண்டு அந்தக் கருத்தைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார் என்றால், அதனைப் புரிந்துகொண்டு தமிழ்த்தேசியக் கட்சிகள் அவ்வாறான ஆட்சி முறைக்குத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்க வேண்டும். அத்துடன் இந்திய மாநிலங்களுக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என மோடியை மையப்படுத்திய பா.ஜா.கவும் தற்போது கூறி வருகின்றது. ஆகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சந்தர்ப்பத்தைச் சரியாகக் கையாளவில்லை.

இந்த டிசம்பர் மாதம் பன்னிரெண்டாம் திகதி 'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழுக்குச் சம்பந்தன் வழங்கிய நேர்காணலில் ரணில் மீதும் இந்தியா மீதும் நம்பிக்கை இழந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிச் சம்பந்தன் அந்த நேர்காணலில் வற்புறுத்துகிறார். இந்தியா மாத்திரமல்ல அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கூட்டுச் சேர்ந்தே ஈழத்தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காண வேண்டுமெனவும் இடித்துரைக்கிறார்.

அதாவது தனியாக நின்று ஈழத்தமிழர் பிரச்சினையை இந்தியாவினால் கையாள முடியாது என்று சம்பந்தன் எடுத்துரைக்கிறார்.

ஆனால் ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா மாத்திரம் தனியாகக் கையாள வேண்டுமென்பது புதுடில்லியின் நீண்டகால விருப்பம். ஆனால் தற்போது இந்தியாவையும் 13 ஐயும் நீக்கிவிட்டு அமெரிக்காவோடு சேர்ந்து வேறொரு வடிவில் புதிய தீர்வை முன்வைக்க ரணிலும் முற்படுகின்றார். தனது நகர்வுக்குச் சாதகமாகவும் சந்தேகமின்றியும் இலங்கையில் இந்தியாவுக்கான முன்னுரிமையை ரணில் வழங்கியுமுள்ளார்.

ஆனால் இந்தியாவைக் கடந்து அனைத்து விடயங்களிலும் அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுடன் சமாந்தரமான முறையில் கையாள வேண்டும் ஏன்புதையே ரணிலுடைய இரகசிய நகர்வுகள் காண்பிக்கின்றன. 2015 இல் ரணில் பிரதமராகப் பதவி வகித்திருந்தபோதும் இதே கருத்தை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

'ரணிலின் சர்வதேச ஆதரவின் மாயை' என்ற கட்டுரையில் தயான் ஜயதிலக, ரணில் விக்கிரமசிங்கவின் மேற்படி அணுகுமுறையைக் கடுமையாகச் சாடுகிறார். கோத்தாய ராஜபக்சவின் கொள்கையோடு ரணில் பயணிப்பதன் மூலம் ஈழத்தமிழர் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் இருந்து ஒதுக்கி அதனை உள்ளக விவகாரமாக மாற்றும் முயற்சி தற்போது வெளிப்படுகின்றது.

புதிய அரசியல் யாப்பின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறி ரணில் மேற்கொள்ளும் பரப்புரையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகள் இணங்கிப் போகக் கூடிய வாய்ப்பும் உண்டு. ஆனால் சம்பந்தனைப் பொறுத்தவரை அந்த நம்பிக்கை இல்லை. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கும் ரணிலின் புதிய ஏமாற்றுப் புரிகின்றது.

ஆனால் சம்பந்தனின் வயது மூப்பினால் கூட்டமைப்பின் தலைமை மாறுமாக இருந்தால், இந்தியாவைக் கடந்து ரணில் கையாள முற்படும் உத்திக்குள் ஈழத்தமிழர் விவகாரத்தை உட்செலுத்துக்கூடிய ஆபத்துக்கள் நேரலாம்.

ஏனெனில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஆயுத இயக்கங்களைத் தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து நீக்கம் செய்து தமிழரக் கட்சி மாத்திரம் தனித்துச் செயற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் சுமந்திரன்.

ஆகவே 'த ஐலண்ட்' நேர்காணலின் பிரகாரம் ரணில் மீதும் இந்தியா மீதும் நம்பிக்கை இழந்து காணப்படும் சம்பந்தன், ஈழத்தமிழர் விவகாரம் இனிமேல் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்ற தனது உத்தியை இறுதிக் காலகட்டத்தில் வெளிப்படுத்தியிருந்தாலும், அதனை நேர்த்தியாகக் கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் மற்றும் இதயசுத்தி உள்ளவர்கள் கூட்டமைப்புக்குள் இல்லை.

அப்படி இருந்தாலும், சுமந்திரனைக் கடந்து எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்ற கேள்விகளும் இல்லாமில்லை.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியருந்த சம்பந்தன், அப்போது கொழும்பில் இருந்த அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் 2009 இல் தனது கொழும்பு இல்லத்துக்கு வருகை தந்து விடுதலைப் புலிகளை அழிக்கப் போவதாகவும் அதன் பின்னர் நிரந்த அரசியல் தீர்வு வழங்கப்படும் என்றும் உறுதிமொழி வழங்கியதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் பத்து வருடங்கள் சென்ற நிலையில் இன்னமும் அரசியல் தீர்வு ஏற்படவில்லை என்று கூறியதோடு, அமெரிக்க - இந்திய அரசுகள் மீதும் குற்றம் சுமத்தியிருந்தார். தான் [illegible] வெளியிட்டிருந்தார்.

அதேநேரம் வடக்கு-கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பதாகச் சம்பந்தன் 'ஐலண்ட்' நேர்காணலில் கூறியிருப்பது மிகத் தவறு. வரலாற்று வாழ்விடங்கள் என்றே ஒப்பந்தத்தில் உள்ளது.

அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்சிற் 1998 இல் தான் எழுதிய 'அசைமென்ட் கொழும்பு' (Assignment Colombo) என்ற நூலில் வடக்கு- கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகம் (Homeland) என்ற வாக்கியத்தை ஒப்பந்தத்தில் இணைக்க ஜே.ஆர். விரும்பவில்லை என்றும், அதனாலேயே மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிப் பிடித்து வரலாற்று வாழ்விடங்கள் (Historic Habitats) என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகவும் விபரிக்கிறார். அதாவது ஜே.ஆர்.பிடிவாதமாக நின்றதாகக் கூறுகிறார்.

ஆகவே வடக்கு= கிழக்குத் தமிழர் தாயகம் என்று ஒப்பந்தத்தில் இல்லை என்பது நிரூபணமாகிறது. இதனைச் சம்பந்தன் போன்ற மூத்த தமிழ்த் தலைவர்கள் மூடி மறைக்காமல், தமிழ் பேசும் தாயகம் என்ற அங்கீகாரத்துடனேயே அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையும் இந்தியாவுக்கு வலியுறுத்த வேண்டும்.

இந்தியா அதனை ஏற்குமானால் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு அதில் பிரச்சினை இருக்காது.

ஆகவே இந்த விடயங்களைப் புரிந்து கொண்டு ஒருமித்த குரலில் தமிழ்த்தரப்பு இந்தியாவை அணுகவில்லை என்பது பட்டவர்த்தனமாகிறது. இருந்தாலும் ரணில் மேற்கொள்ளும் உத்தியின் ஆபத்தை உணர்ந்து இந்தியா மாத்திரமல்ல, அமெரிக்கா, பிரித்தானிய போன்ற நாடுகள் ஒன்று சேர்ந்தே கையாள வேண்டுமெனச் சம்பந்தன் 'ஐலண்ட்' நேர்காணலில் விடுத்துள்ள எச்சரிக்கையயின் பின்னணியை அறிந்து தமிழ்த்தரப்பு இயங்குமாக இருந்தால், ரணில், மிலிந்த மொறொகொட போன்ற சிங்கள இராஜதந்திரிகளின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டைத் தகர்க்க முடியும்.

ரஷ்ய ஆதரவும், இந்தோ- பசுபிக் விவகாரத்தில் அமெரிக்க ஆதரவும் என்றும் இரட்டைத் தன்மையுடைய இந்திய வெளியுறவுக் கொள்கை தொடர்பாக அமெரிக்கா பல சந்தர்ப்பங்களில் இந்தியாவுக்குக் கடும் அழுத்தம் கொடுத்திருக்கிறது.

எனவே உக்ரைன் போர்ச் சூழலில் இந்திய நிலைப்பாடு குறித்து அமெரிக்கா அதிருப்தியடைந்துள்ளதை ரணில் அறியாதவரல்லர். அமெரிக்காவும் ரணிலின் உத்திக்கு ஆதரவும் வழங்கக் கூடும்.

ஏனெனில் உக்ரைன் போர்ச் சூழலில் உலக அரசியல் ஒழுங்கு இன்னமும் ஒரு சமன்பாட்டுக்கு வரவில்லை. ஆகவே அமெரிக்க = இந்தியப் பனிப்போருக்கு மத்தியில், அவசர அவசரமாக இனப்பிரச்சினைத் தீர்வு என்று கூறிக் கொண்டு '13 ஐ' அகற்றி இந்தியத் தலையீட்டையும் நீக்கம் செய்து, புதிய அரசியல் தீர்வு என்ற தோற்றப்பாட்டை உருவாக்க ரணில் எடுக்கும் முயற்சிக்குத் தமிழர்கள் சிலர் ஒத்துழைப்பு வழங்கக்கூடிய ஆபத்துக்களும் இல்லாமில்லை.

அதாவது கோத்தாபயவின் இந்த நகர்வை அவருடன் சேர்ந்து 2020 இல் கையாளத் தயங்கிய தமிழர் தரப்புகள் தற்போது ரணிலுடன் இணைந்து கையாள விரும்பக்கூடும். ஆனால் ரணிலின் இந்த நகர்வில் அரசியல் தீர்வு என்ற கதை வெறுமனே ஒரு உருவகப்படுத்தல் மாத்திரமாகவே அமையும் என்பதில் சந்தேகமேயில்லை.

அத்துடன் ஈழத்தமிழர் விவகாரம் என்பது ஒட்டுமொத்த இலங்கை மக்களின் பிரச்சினையாகவும் ரணில் சித்திரிக்கிறார். முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள், சிங்கள மக்கள் எல்லோருக்கும் பிரச்சினை உள்ளது என்று பொதுமையாகக் கூறுவதன் மூலம் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய தமிழ்த்தேசியக் கோட்பாட்டை அகற்றுவதே அதன் பிரதான நோக்கம்.

ஆகவே இறுதியில் பதின்மூன்றும் இல்லை, இந்தியத் தலையீடும் இல்லை என்ற நிலை உருவாகும். "ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆகவே வடக்கு- கிழக்குத் தமிழர்களின் அரசியல் பிரச்சினை வேறு அதனைத் தனியாகவே பேசித் தீர்க்க வேண்டும்" என்று சம்பந்தன் 'ஐலண்ட்' நேர்காணலில் அடித்துக் கூறியதன் காரண காரியமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

எனவே '13' அரசியல் தீர்வு அல்ல என்பதில் உறுதியாக இருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்ற தமிழ்த்தரப்புகள், இறுதி நேரத்தில் சம்பந்தன் விரும்பியோ விரும்பாமலோ முன்வைத்துள்ள 'த ஐலண்ட்' நாளிதழில் முன்வைத்துள்ள சில நியாயங்களை ஒருமித்த குரலில் செயற்படுவதற்கான ஏற்பாடு

04 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O நிலாந்தன்




# பேச்சுவார்த்தைகளின் ஆண்டா? பேய்க்காட்டப்படும் ஆண்டா?

புதிய ஆண்டு பேச்சுவார்த்தைகளோடு தொடங்குகின்றது. புத்தாண்டு பிறந்த கையோடு மூன்று அல்லது நாலு நாள்க ளுக்கு தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாள்கள் என்பதே வெளியுலகத்தைக் கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் சீரியஸாக இருக்கிறது என்பதை காட்டுவதற்கான ஓர் உத்தி அது. அவ்வாறு காட்டவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஏனெனில் இப்பொழுது நடக்கும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் தர வேண்டும் என்பதை விடவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்கக்கூடிய நாடுகளைக் கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான்.

மோதலில் ஈடுபடும் தரப்புகள் அல்லது பிணக்குக்கு உட்பட்ட தரப்புகள் எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு வரும் என்றால், அரசியல் வலுச்சமநிலை மாறும் போதுதான். அரசியல் வலுச்சமநிலையை போரின் மூலமும் மாற்றலாம். மக்கள் போராட்டங்களின் மூலமும் மாற்றலாம். தேர்தல் முடிவுகளின் மூலமும் மாற்றலாம். இலங்கைத்தீவின் வலுச்சமநிலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோன்றிய தன்னெழுச்சி போராட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது. தன்னெழுச்சிப் போராட்டங்கள் சிங்கள- பௌத்த கடுந்தேசியவாதத்தை பதுங்கச் செய்துவிட்டன. சிங்கள- பௌத்த கடுந்தேசியவாதமானது சிங்கள - பௌத்த லிபரல் முகமூடியின் பின் மறைவெடுத்து நிற்கிறது. தாமரை மொட்டுக் கட்சி ஒற்றையானைக்குப் பின்னால் பதுங்கி நிற்கின்றது. இதனால் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் தான் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்குக் காரணம்.

இதைத் தமிழ்த்தரப்பின் நோக்குநிலையில் இருந்து சொன்னால், பேச்சுவார்த்தைக்கான அரசியல் வலுச்சமநிலை இலங்கைத்தீவில் உருவாக காரணம் தமிழ்த்தரப்பின் போராட்டங்கள் அல்ல. தமிழ்த்தரப்பு பலமடைந்ததாலும் அல்ல. மாறாக சிங்களத்தரப்பு தனக்குள் தானே மோதி பலவீனம் அடைந்ததே காரணம். இவ்வாறு சிங்களத் தரப்பு பலவீனமடைந்ததால் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை மாற்றம் கண்டுள்ளது. இதைப் பயன்படுத்தி வெளிநாடுகள் இலங்கைத்தீவின் மீதான தமது பிடியை மேலும் இறுக்க முற்படும்பொழுது இந்தத்தீவின் அரசியல், இராணுவ, பொருளாதார வலுச்சமநிலையில் மேலும் மாற்றம் வரலாம்.

உதய கம்மன்பில அதைத்தான் "பொருளாதார நெருக்கடியைப் பகடைக்காயாகக் கொண்டு நாட்டுக்கு எதிரான தீர்மானங்களைச் செயற்படுத்துவதாயின், 30 வருட கால யுத்தத்தை வெற்றிகொள்ளாமல் இருந்திருக்கலாம்" என்று கூறியிருக்கிறார்.

கஜேந்திரகுமார் அதைத்தான் தமிழ் நோக்குநிலையில் இருந்து கூறியிருக்கிறார். அதாவது 'பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்களத்தரப்பு பலவீனம் அடைந்து விட்டது. அதனால் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வருகிறது. எனவே தமிழ்த் தரப்பு தனது பேரத்தை பலப்படுத்த வேண்டும்' என்று.

ஆனால் இது தமிழ்த்தரப்பின் போராட்டத்தாலோ அல்லது அதிகரித்த பலத்தாலோ ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் அல்ல. இந்த வலுச்சமநிலை மாற்றத்தில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் நாடுகளின் அழுத்தமும் ஓரளவுக்கு உண்டு. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உதவிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் ஒரே பொதிக்குள் வைக்கப்படவேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன. அதேசமயம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவின் நிலைப்பாடும் அதுவாக இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டுபிடிக்க வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்தின் மீது உண்டு. அதுவும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று ஒரு தோற்றத்தை கட்டியெழுப்பக் காரணம். எனவே இதில் தமிழ்த்தரப்பின் பேரபலம் என்பது முதலாவதாக சிங்களத்தரப்பின் வீழ்ச்சியாகவும், இரண்டாவதாக வெளி உலகத்தின் அழுத்தமாகவும் காணப்படுகிறது.

அதனால் பேச்சுவார்த்தையை எதிர்பார்ப்போடு பார்க்கும் வெளியுலகத்துக்கு தமிழ்த்தரப்பு அதில் ஈடுபடும் என்கேஜ் (engage) பண்ணும் என்ற செய்தி கொடுக்கப்பட வேண்டும். இதன்பொருள் மேற்கு நாடுகள் ஒரு தீர்வைப் பெற்றுத் தரும் என்பதல்ல. மாறாக, நவீன ராஜதந்திரவியல் எனப்படுவது 'என்கேஜ்மென்ட்'தான். இந்த அடிப்படையில், ஒரு தரப்பாகச் சிந்தித்தால், ஒரு தேசமாகச் சிந்தித்தால், பேச்சுவார்த்தையில் என்கேஜ் பண்ண வேண்டும். தவிர தமிழ்த்தரப்பிடம் நாட்டில் சொந்தமாகப் பலம் எதுவும் கிடையாது. அந்தப் பலத்தின் காரணமாக வலுச்சமநிலை மாறவும் இல்லை. எனவே தன் பலம் எதுவென்று கண்டு தமிழ்த்தரப்பு பேச்சில் ஈடுபடவேண்டும். அதன்பொருள் பேச்சுவார்த்தையை இதயபூர்வமாக நம்ப வேண்டும் என்பதல்ல. இது விடயத்தில் "என்கேஜ் அண்ட் எக்ஸ்போஸ்" அதாவது ஈடுபட்டு அதை அம்பலப்படுத்துவது என்ற ஒரு தந்திரத்தை தமிழ்த்தரப்பு கடைப்பிடிக்கவேண்டும்.

சிங்கள-பௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்குவாதிகள் லிபரல் முகமூடி அணிந்த ஒற்றை யானைக்குப் பின்னால் பதுங்குகிறார்கள். அவர்களுக்கு உலக அங்கீகாரத்தை பெறுவதற்கு அந்த ஒற்றை யானைய ஏற்பாடு செய்யும் பேச்சுவார்த்தை என்ற தோற்றமாயை தேவை. எனவே அதைப் பயன்படுத்தி பதுங்கியிருக்கும் சிங்கள-பௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்காளர்களை ஒரு தீர்வை நோக்கி வளைத்தெடுக்கலாம் என்று மேற்கு நாடுகள் நம்பக்கூடும். அந்த நம்பிக்கை தமிழ் மக்களின் சுமார் ஒரு நூற்றாண்டு கால அனுபவத்துக்குப் பொருந்தி வரவில்லை என்பதனை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு தமிழ்த்தரப்புக்கு உண்டு. எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்த்தரப்பை அம்பலப்படுத்த வேண்டும். அதுதான் இப்பொழுது உயர்ந்திருக்கும் தமிழ்த் தரப்பின் பேரத்தை தொடர்ந்து உயர்வாக வைத்திருக்க உதவும்.

சர்வதேச நாணயநிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் கிடைக்கவில்லை. மேலும் அந்த உதவிகள் கடனை அடைக்கப் போதுமானவை அல்ல. ஆனால் அந்த உதவிகள் கிடைத்தால் ஏனைய நாடுகளிடம் உதவி பெறத் தேவையான அங்கீகாரம் அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடும். எனவே அந்த அங்கீகாரத்தை நோக்கி உழைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் அரசாங்கம் மேற்குநாடுகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

அதனால் ரணில் விக்கிரமசிங்க முன்பு 2015 இல் இருந்து 2018 வரையிலும் முன்னெடுத்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஒரு புதிய வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது. தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்கப் பொறிமுறை என்ற உரையாடல் அதைத்தான் குறிக்கிறது. ஆனால் நிலைமாறுகால நீதி என்பது இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் ஓர் அழகிய பொய்யாகி விட்டது. ரணிலோடு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகச் செய்யப்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வவுனியாவில் வைத்துச் சொன்னார்...."6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை முயற்சி செய்தோம். அதில் தோற்றுவிட்டோம்" என்று. அவ்வாறு ஏற்கனவே இந்த நாடு பரிசோதித்து தோல்வி கண்ட ஒரு விடயத்தை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க கையில் எடுக்கப் போகிறாரா ?

முன்னைய நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின்போது கூட்டமைப்பு அரசாங்கத்தோடு இணைந்து யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டது. ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அமர்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறிய வார்த்தைகளை இங்கே தமிழ்த்தரப்பு மீட்டுப் பார்க்க வேண்டும். "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காண வேண்டும். அவரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வரமாட்டார்" என்று டிலான் தெரிவித்திருந்தார். அது உண்மை. ஏனென்றால் அந்தளவுக்கு சம்பந்தர் விட்டுக் கொடுத்தார். பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தீர்வு என்று சம்பந்தர் காயத்திரி மந்திரம் போல திரும்பத்திரும்பச் சொன்னார். ஆனால் அது எதுவுமே மஹிந்த அணியை சமாதானப்படுத்தவில்லை. அவர்கள் யாப்புருவாக்க முயற்சியை இடைக்கால வரைவோடு குழப்பினார்கள்.

இப்பொழுது மறுபடியும் சம்பந்தர் விட்டுக் கொடுக்கப் போகிறாரா, இல்லையா? என்பதனை தமிழ்மக்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டிலான் வழங்கிய பாராட்டுப் பத்திரத்தை விடவும் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தருக்கு வழங்கிய தண்டனை பெரியது.

எனவே கூட்டமைப்பு இம்முறை ஏனைய கட்சிகளோடு இணைந்து திட்டவட்டமாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். முதலாவதாகப் பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பை, மறுகட்டமைப்புச் செய்ய வேண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சர்வகட்சி மாநாடு. அது வெளித் தோற்றத்துக்கு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்கும் ஒரு ஜனநாயக ஏற்பாடாகத் தோன்றலாம். ஆனால் கடந்த 75 ஆண்டுகால அனுபவம் என்னவென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து எல்லா சர்வகட்சி மாநாடுகளும் ஏமாற்று வித்தைகளே. எனவே பேச்சுவார்த்தைகளை பிணக்குக்கு உட்பட்ட தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளாக மாற்ற வேண்டும். அதன்படி தமிழ்த்தரப்பு சிங்களத் தரப்புடனும் முஸ்லிம் தரப்புடனும் பேச வேண்டும். அரசாங்கமே சிங்களத் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். எல்லாக் கட்சிகளையும் கூட்டிக்கொண்டு வந்து சர்வகட்சி மாநாடு என்று சொல்லிக் குழப்பியடிக்க முடியாது. சிங்களக் கட்சிகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ்க் கட்சிகளையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு தரப்பாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறு கட்டமைப்புச் செய்ய வேண்டும்.

அடுத்த கட்டமாக மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வர வேண்டும். இந்தியாவும் உட்பட மேற்கு நாடுகளை இணைத் தலைமை நாடுகளாக உள்ளே இறக்க வேண்டும். அண்மையில் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார்....மூன்றாவது தரப்பு தேவையில்லை என்று. அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதுவே தமிழ்த்தரப்பின் அபிப்பிராயமாக இருக்கத் தேவையில்லை. இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறுகட்டமைப்புச் செய்துவிட்டு பேசத் தொடங்கலாம். ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் நாடகத்தில் பங்காளிகளாக இணைவதா? அல்லது தமது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா? என்பதைத் தமிழ்க் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. போன தடவை நிலைமாறுகால நீதியின் பங்காளிகளாக மாறப் போய் ஆறு ஆசனங்களை இழந்த கூட்டமைப்பு இனி மேலும் "பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத இலங்கைத் தீவுக்குள்" என்று உச்சாடனம் செய்யத் தேவையில்லை. டிலான் பெரேராக்களின் பாராட்டுப் பத்திரமா? அல்லது தமது சொந்த மக்களின் தோல்வியா? என்பதனைக் கூட்டமைப்பு தீர்மானிக்க வேண்டிய ஆண்டு இது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவின் மாலியாக ஆசியாவில் இலங்கை !




○ மருத்துவர் சி.யமுனாநந்தா

இலங்கையும் மாலிதேசமும் 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சுதேச அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதன் பின் ஐரோப்பிய காலனித்துவத்தால் தமது சுயாதிக்கத்தை இழந்தது. உலக அரசியல் ஒழுங்குக்கு ஏற்ப இரு நாடுகளிலும் சிறுபான்மையினர் ஒதுக்கப்பட்டு, பெரும் இன அழிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. மாலியில் இனங்களுக்கு இடையிலான வன்முறைகள், 1963ஆம் ஆண்டு, 1990ஆம் ஆண்டு, 2002ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தன. இலங்கையிலும் 1958, 1977, 1983ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளன. இவற்றுக்கு மேலாக 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வு, 2008 - 2009 வன்னி அழிவு என்பன மானிட நேயத்தில் செயற்திறன் இன்மையினை எடுத்துக்காட்டி உள்ளன.


## பூகோள முக்கியத்துவம்

மாலி தேசம் ஆபிரிக் கண்டத்தின் போக்குவரவு பொருளாதார மையமாக அமைவதுபோல் இலங்கையும் தென் கிழக்காசியாவின் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது.

மாலி தேசத்தில் சிறுபான்மையினர் எவ்வாறு அழிந்தனரோ அவ்வாறே இலங்கையிலும் சிறுபான்மைத் தமிழர்கள் அழிக்கப்பட்டனர்.

மாலி தேசத்தில் ஏற்பட்ட சிக்கலான அரசியல் இராணுவச் சூழலை எதிர்கொள்ள பிரான்ஸ் நாட்டுப் படைகள் 2013ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து ஐ.நா. அமைதிப் படைகளும் செயற்பட்டன. இந்தப் படைகளாலும் பெரியளவில் மனித உரிமை மீறல்களும், பாலியல் கொடூரங்களும் நிகழ்ந்துள்ளன. அவ்வாறானவை இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை இராணுவமும், 1987 - 1990களில் இந்திய அமைதிப்படையும், 2005 - 2009இல் முகவரி இல்லாத பல்வேறு இராணுவங்களும் செயற்பட்டு மனித அவலங்களையும், பாலியில் கொடூரங்களையும் ஏற்படுத்தின.

மாலியின் பிரதான ஏற்றுமதிப் பொருளான பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இலங்கையிலும் விவசாய உற்பத்திகள், தேயிலை உற்பத்தி என்பன பாதிக்கப்படடுள்ளன. மாலியில் ஆட்சியாளர்கள் அநீதியான செயற்பாடுகள், ஊழல்கள் என்பனவற்றை மேற்கொண்டனர். அதற்கு நிகராகவே இலங்கையிலும் நிகழ்ந்துள்ளது.



## சர்வதேச உதவி

மாலியில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி என்பன ஆலோசனைகளை வழங்கின. மின்சாரம் வழங்கல் தனியார் மயமாக்கப்பட்டது. நீர் வழங்கல் தனியார் மயமாக்கப்பட்டது. இராணுவ உயர் அதிகாரிகள் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை நிறுவினர். இலங்கையிலும் அரச நிறுவனங்கள் பலவும் தனியார் மயப்படுத்தும் சூழல் தற்போது உருவாகியுள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வறுமைமட்டம் அதிகரித்துள்ளது. அதாவது பஞ்சம் பரவியுள்ளது. சிறுவர்களின் போசணை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்நிலையில் இலவச மருத்துவசேவை, இலவசக் கல்விச் சேவை சடுதியாக செயலிழக்க நேரிடலாம். இதனைத் தவிர்க்க ஆக்கபூர்வமான உத்திகளை நாம் கையாள வேண்டும்.

## இராணுவச் செலவீனத்தை குறைப்பது மிக அவசியம்

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் முதலில் மேற்கொள்ள வேண்டிய மாற்றம் இராணுவச் செலவீனங்களை 25 வீதமாகக் குறைத்தல் வேண்டும். இலங்கை இராணுவத்தில் தொண்டர் படையணியை நிறுவுவதன் மூலம் இதைச் சாத்தியப்படுத்தலாம். ஏனெனில் யுத்தம் போன்ற அவசர சூழலிலேயே இராணுவ ஆளணி அவசியம். தற்போதைய தகவல் தொழில்நுட்பயுகத்தில் ஒரு லட்சம் சிப்பாய்கள் செய்யும் வேலையை ஆயிரம் சிப்பாய்களால் மேற்கொள்ள முடியும். மேலும் வடக்கு கிழக்கில் பொருளாதார வளமுள்ள இடங்களை பாதுகாப்பு என்ற பெயரில் கையகப்படுத்தி வைத்துள்ளமையும் தவறாகும். இலங்கை போன்ற சுமார் 21 மில்லியன் சனத்தொகை கொண்ட மாலி தேசம் எவ்வாறு வளமான எதிர்காலம் இல்லாது அழிவுறுகின்றதோ அவ்வாறான நிலைமையே இலங்கையில் ஏற்படுகின்றது.

கெடுவான் கேடு நினைப்பான் என்பதுபோல் இலங்கை அரசியல் வாதிகளிடையேயோ, இலங்கை நாடாளுமன்றப் பிரதிகளிடையேயோ சமூகப் பொருளாதாரம் தொடர்பான ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் இல்லை. இலங்கையில் காலம் காலமாகப் புரையோடியுள்ள அரசியல் பிணக்குகளைத் தீர்ப்பதற்குக்கூட ஆணித்தரமான அணுகுமுறைகள் இல்லை. இந்த நிலையில் மாறிவரும் புதிய உலக ஒழுங்கில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் செம்மையான அணுகுமுறைகளை நாம் உற்றுநோக்கல் வேண்டும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் நிழலே தற்போது எம்மை ஆழ்பட்டினிக்கு இட்டுச் செல்லாது காப்பாற்றுகின்றது.

இந்த நிலையில் வடபகுதித் தமிழ்மக்கள் விவசாயம், சிறுகைத்தொழில், மீன்பிடி, மருத்துவம் என்பவற்றில் தமிழகம் சார்ந்த முதலீடுகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். இன்று இலங்கையில் ஜனநாயகம், பொருளாதாரம் இராஜதந்திரம் அற்ற போலி அரசே செயற்படுகின்றது. இவ்வரசின் தீர்மானங்களின் சட்டபூர்வதன்மை, அதன் ஆதிக்க எல்லை என்பன காலத்துடன் இல்லாது போகும்சூழலே உள்ளது. இத்தகைய சூழலில் எமது மக்கள் புலம்பெயர்ந்து உலகெங்கும் அவலப்படுதல் ஆகாது. நாம் உறுதியுடன் எம்மண்ணில் நின்று நிகர பொருளாதார மேன்நிலையையுடைய சமூக சக்தியாகச் செயற்படுவோம். நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விவசாயிக்குப் பின்னால் செல்லலாம். ஆனால் ஓர் அரசியல்வாதிக்கு பின்னால் செல்லக்கூடாது. மாலிதேசத்தில் நிகழ்கின்ற அரசியல் பொருளாதார சமூகச் சிக்கல்நிலையில் இருந்து எமக்கு சில பாடங்கள் தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றன.

ஆபிரிக்கக் கண்டத்தில் உறுதியாக இருந்த நாடுகளான லிபியா, லைபீரியா, எகிப்து போன்றன பொருளாதாரத்தில் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவிட்டன. அதேபோல் ஒரு நிலை ஆசியக் கண்டத்தில் ஏற்படாது இருப்பதனை தற்போதைய ரஷ்ய உக்ரைன் யுத்தத்தில் இந்தியாவின் அணுகுமுறை காப்பாற்றிவிட்டது. இந்த நிலையில் இந்திய அரசின் இராஜதந்திர, பொருளாதார ஒத்துழைப்புக்கள் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள உதவுவதுடன் எமது அரசியல் பிரச்சினைகளுக்கும் நிரந்தர முற்றுப்புள்ளியை வைக்கும். இந்திய அரசும் பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பெயரில் இலங்கையில் தமிழர் தாயகத்தில் நிகழும் இராணுவ ஆதிக்கத்துக்கும், பௌத்த மயமாக்கலுக்கும் மறைமுகமாகத் துணைபோதல் தவறானதாகும். அமைதியினை நேசிக்கக் கற்றுக் கொள்வோம். வன்முறை வழிகளை நாடோம். அடக்குமுறைகள் மூலம் நிகழும் பொருளாதாரச் சுரண்டல்களை இல்லாது செய்வோம்.

# 13 ஐ அகற்ற ரணில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொள்ள வேண்டிய காலகட்டமிது.

எதிர்த்துவிட்டு வெளியில் நிற்காமல், தற்போது உருவாகியுள்ள புவிசார் அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குள் ஈழத்தமிழர் தொடர்பான சரியான உத்தியை வகுக்க வேண்டும். ஒருமித்த குரலில் கூட்டாட்சி முறைக்கு அல்லது முழுமையான சமஷ்டிக் கோரிக்கையை முன்வைப்பதற்குரிய ஏற்பாட்டை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தற்துணிவோடு நகர்த்த வேண்டிய தருணமிது.

"இலங்கையின் தேசியப் பாதுகாப்பை மறுபரிசீலனை செய்தல் புரிந்து கொள்ளுதல் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயங்களுக்கு பதிலளிப்பது' என்ற தலைப்பில் கோத்தாபயவின் நிழல் ஆலோசகராக இருந்த பேராசியர் றொஹான் குணரட்ன (Rohan Gunaratna) "சிறிலங்கா மிலிற்றரி அக்கடமிக் ஜேர்னல்" (Sri lanka Military Academy Jurnal) என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் இந்த மாதம் வெளியான நான்காவது இதழில் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

அந்த ஆய்வுக் கட்டுரையில் இலங்கையின் தேசிய பாதுகாப்பு பலவீனமாகியுள்ளது எனவும் இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுப்படுத்தக் கூடியதாக இல்லை என்றும் அதற்குரிய காரண காரியங்களையும் பேராசிரியர் முன்மொழிந்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்புச் சட்டங்கள், இலங்கை இராணுவத்தைப் பாதுகாத்தல், இராணுவத்துக்கு எதிரான இணையத்தளப் பிரசாரங்கள் மற்றும் இலங்கையின் காலநிலை,உணவுப் பாதுகாப்பு,சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டிய அவசியம் பற்றிய நீண்ட ஆய்வுச் சஞ்சிகையில் இலங்கையின் ஒருமைப்பாட்டை அதாவது ஒற்றையாட்சி மற்றும் சிங்களத்தேசம் என்பதை நிறுவும் கோட்பாட்டு முறையை அறிமுகம் செய்துள்ளார்.

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம் இல்லை என்ற தொனியைப் பேராசிரியர் வெளிப்படுகிறார். ரணில் மாத்திரம் அல்ல, இலங்கைத்தீவில் எவர் ஆட்சியமைத்தாலும் றொஹான் குணரட்ன வகுத்த ஆய்வின் அடிப்படையில் இலங்கை நிர்வாகம் அமைய வேண்டும் என்ற பரிந்துரையும் கண்கூடாகத் தெரிகிறது.

எனவே '13' ஐ ஆரம்பப் புள்ளியாக நோக்கி மோடிக்குக் கடிதம் எழுதிய ஆறு தமிழ்த்தேசியக் கட்சிகளும் முழுமையான சமஸ்டிக்கு ஏற்ப இந்தியாவைக் கையாளக்கூடிய உத்திகளை அப்போதே வகித்திருக்க வேண்டும்.

மாறாகச் சிங்கள ஆட்சியாளர்களின் நகர்வை அறிந்து தமது புவிசார் அரசியல் நலனுக்கு ஏற்ப பதின்மூன்றுடன் தமிழ்த்தரப்பை மட்டுப்படுத்திக் கையாள விரும்பிய புதுடில்லியின் போக்குக்கு ஏற்பச் செயற்பட்டதன் ஆபத்துக்களையே, தற்போது ரணில் ஆட்சியில் எதிர்நோக்க நேரிட்டுள்ளது. அதன் வலியை இந்தியாவும் இன்று அனுபவிக்கின்றது.

அதாவது பதின்மூன்றுடன் சேர்த்து இந்தியாவையும் அகற்றி அமெரிக்க= சீன அரசுகளுடன் இந்தியாவைக் கடந்து நேரடி இராஜதந்திர உறவைப் பேண வேண்டும் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பங்களின் ஆபத்துக்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பகிரங்கப்படுத்தவில்லை.

அத்துடன் ஈழத்தமிழர்களின் இந்தியா மீதான நம்பிக்கையின் வகிபாகத்தை உரிய முறையில் வெளிப்படுத்தவுமில்லை. ஆகவே வெறுமனே கையாளப்படும் சக்தியாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்தியதன் பாதக விளைவுகளையே இன்று இந்தியா அனுபவிக்கின்றது. ஈழத் தமிழர்களை திரிசங்கு நிலைக்கும் அது தள்ளியுள்ளது.

தற்போது ரணில் நடத்தவுள்ள பேச்சுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமெனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோருவது இலக்குத் தவறிய நீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



சு.கனிஷ்கா
தரம் 2
யா/ ஏழாலைமேற்கு
சன்மார்க்க வித்தியாலயம்




யூ.ர.தியோரிநாத்
தரம்7G
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி



சரண் சுபிஷன்
தரம் 1A
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை



ஆ.சுவேதிஹா
தரம் 3D
யா/ இந்து ஆரம்பப்
பாடசாலை




ப.தஷ்வின்
தரம் 7
யா/ கொக்குவில்
இந்து கல்லூரி

## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



S..அபிஷாலினி
தரம் 8
யா/ உடுவில் மகளிர்
கல்லூரி



உ. வரதக்ஷலைசாம்பா
தரம் 4B
யா/இந்து ஆரம்ப
பாடசாலை.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

குறிப்பு: யாழ்ப்பாண வரலாற்று தொடரில் தற்போது இடம் பெற்று வரும் சம்பவங்கள் யாவும் (Seven Years in Ceylon)நூலாசிரியரின் கருத்துகளே. கட்டுரையாளரின் கருத்துக்கள் எதுவுமில்லை.கட்டுரையாளர் மொழிபெயர்ப்பை மட்டுமே செய்து வருகிறார். )

ஜோன் ஹென்றி மார்ஸ்டன் (John Henry Marstson MRCS, LRCP, இலங்கைக்கான மருத்துவக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். மருத்துவர் மார்ஸ்டன் வடமாகாணத்திலுள்ள 316,000 பேருக்கும் ஒரேயொரு தேர்ச்சி பெற்ற பொது மருத்துவ நிபுணர் என நாங்கள் நினைக்கிறோம். மதமாற்றப் பணிகளுக்கு ஒரு மருத்துவப்பணிக்குழு அவசியம். மதம் மாறியவர்கள் பெரும்பாலானோர் இந்த மருத்துவமனைக்கு வருவார்கள். வரும் நோயாளர்களுக்கும் உதவியாளர்களுக்கும் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொள்ளும் விதத்தில் நற்செய்தியைப் புகட்ட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களது சந்தேகங்களைத் தீர்த்து வைக்கவேண்டும்.

இங்கு மருத்துவப்பணிக்குழு வேதாகமப் பணிகளைச் சிறப்பாக செய்து வருகின்றது. இவர்கள் மருத்துவப் பணியுடன் வேதாகமப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வருகின்றனர். இங்குள்ள மருத்துவக்குழுவினர் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மருத்துவப்பணிகளுடன் வேதாகமப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவமனையை ஆரம்பிப்பதே எமது முதல் பணி. இதற்கென நாங்கள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வசிப்பவர்களிடம் நன்கொடைகளை எதிர்பார்க்கிறோம்.ஒரு நிரந்தரப் படுக்கைக்கு 100 ஸ்டேர்லிங் பவுணும் அரைப் படுக்கைக்கு 50 ஸ்டேர்லிங் பவுணும் கால் படுக்கைக்கு 25 ஸ்டேர்லிங் பவுணும் எதிர்பார்க்கிறோம். மருத்துவசேவைக்கு நன்கொடை செலுத்துவோர் வேறு கிறிஸ்தவப் பணிகளுக்கு நன்கொடை செலுத்தத் தேவையில்லை. இந்தப்பணம் மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் நோயாளர்களுக்குத் தேவையான விடயங்கள், மருந்து வகைகள், நோயாளர்களுக்குரிய உணவு போன்ற விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும். கொடையாளர்கள் தமது பெயரைப் பொறிக்க விரும்பினால், நாங்கள் அவரது பெயரை அவரது அன்பளிப்பின் மீது பித்தளைத் தகட்டில் நிரந்தரமாக பொறிப்போம். இது யாழ்ப்பாண மக்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள் தங்களை நேசிக்கிறார்கள், தங்களுக்காக தியாகம் செய்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். வேதாகம வகுப்புகளை நடத்துவோர், அறநெறிப் பாடசாலை ஊழியர்கள், ஆசிரியர்கள், நண்பர்களின் பெயரிலோ , YMCA அங்கத்தவர்கள் எவரும் தமது பெற்றோர் ,உறவினர்களின் பெயரிலோ ஞாபகார்த்த அன்பளிப்புகளை வழங்கலாம். யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது 100 ஸ்டேர்லிங் பவுண் அன்பளிப்புச் செய்த கம்பெல் வைற் (J.Capbell White) எமது மருத்துவக் குழுவுக்கும் 100 ஸ்டேர்லிங் பவுண் அன்பளிப்புச் செய்துள்ளார். சிறிது காலத்துக்கு முன்னர் பழைய வெலிங்டன் மண்டப நிர்வாகிகள் 100 ஸ்டேர்லிங் பவுண் அன்பளிப்புச்செய்துள்ளனர். இது உண்மையில் அன்பளிப்பு அல்ல, ஒரு பெண் மருத்துவருக்கான ஒரு வருடச் சம்பளப்பணம் .

வட இலங்கையில் எமது மருத்துவக்குழு கால் பதித்ததன் மூலம் இந்து மருத்துவ குருமாரின் பிடியிலிருந்து வட இலங்கை மக்களை விடுவித்துள்ளோம். கிறிஸ்துவின் கிருபையும், மருத்துவ உதவிகளும் வட இலங்கை மக்களுக்கு கிடைக்கும். நோய், பிணி போன்ற சகல துன்பங்களிலிருந்தும் வட இலங்கை மக்களுக்கு விடுதலை கிடைக்கும். வட இலங்கைப் பெண்களுக்கு ஒரு பெண்மருத்துவர் அவசியம். கடவுளின் கிருபையால் எமது நண்பர்கள் எதுவித கேள்வியுமின்றி ஒரு பெண் மருத்துவரை நியமிப்பதற்குரிய சம்பளத்தை வழங்கத் தயாராக இருந்தனர்.

பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான மருத்துவமனை ஒன்றை நிர்மாணிப்பதற்கு 3000 ஸ்டேர்லிங் பவுண் தேவை. அத்துடன் ஊழியர்களின் சம்பளம், மருந்துகள் போன்றவற்றுக்கு வருடாந்தம் 450 ஸ்டேர்லிங் பவுண் தேவை. உள்ளூர் மற்றும் ஐரோப்பிய கிறிஸ்தவ ஊழியர்களுடன் ஆரம்பிக்கப்படும் இந்த மருத்துவமனை அவர்களின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும். கடந்த ஜூன் மாதம் 'இந்திய ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகம் '(IFNS) ( FNS என்பது friend in Need Society , IFNS என்பது India friend in Need Society என நினைக்கிறேன் யாழ்ப்பாணத்தில் இயங்கிய friend in Need Society யும் இதுவும் ஒன்றா வேறு வேறா என்பது தெரியவில்லை).

வட இலங்கையில் நன்கு தேர்ச்சி பெற்ற இரு பெண் மருத்துவர்கள்,உள்ளூர் உதவியாளர்களுடன் பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான மருத்துவமனை ஒன்றை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்குமாறு IFNS அனுமதி வழங்கியிருந்தது. இந்தப் பெண்களுக்கான மருத்துவமனையும் பொது மருத்துவமனையும் தனித்தனியாக இயங்கும். இந்த மருத்துவமனைகளிரண்டும் இந்துக் குருமாரின் கைகளில் உள்ள மருத்துவத்துறையை இந்துக் குருமாரின் பிடியிலிருந்து விடுவித்து மக்களை மதம் மாற்றும் பணியில் ஈடுபடுமென நம்புகிறோம்.


(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர் கிறீனும் மருத்துவக் கலைச்சொற்களும்

யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 14
சில குறிப்புக்கள்

○ பா. துவாரகன்



மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன்
Dr.Samuel Fisk Green (1822-1884)

பயணங்களின்போது நூல்களை வாசிப்பதற்காகக் கொண்டு செல்லும் வழமை இன்றைய திறன்பேசி (Smartphone) யுகத்தில் அருகிவிட்டாலும் முற்றாக இல்லை என்று கூறிவிட முடியாது. இன்று புகையிரதப் பயணங்களில் திறன்பேசிகளில் இசையை, விரிவுரையைக் கேட்டவாறு செல்வார்கள்; பிடித்தமான ஏதோவொன்றைப் பார்த்தும் கேட்டும் ரசித்தும் பயணங்கள் தொடரும்.

40 வருடங்களுக்கு முன்னர் 1975 - 1979 காலப்பகுதியில் கட்டுப்பெத்தை வளாகத்தில் (தற்போதைய மொரட்டுவப் பல்கலைக்கழகம்) கட்டுமானப் பொறியியல் (Civil Engineering) படிக்கச் சென்ற நாகலக்ஷ்மி அக்கா (உயிர்நிழல் லக்ஷ்மி) விடுமுறையின் போது சுன்னாகம் - கொழும்பு புகையிரதப் பயணங்களின்போது அவரது அப்பா படித்த புத்தகங்களைப் படிப்பதற்காக எடுத்துச் செல்வார்; மு. வரதராசனாரது அகல்விளக்கு, கயமை; கல்கியின் சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு முதலானவை. நாகலக்ஷ்மி அக்காவினுடைய அம்மா அமரர் திருமதி. ஞானரத்தினம் (எங்களது தாய்வழி உறவினர்) சிறுவயதில் எமக்கு இதைச் சொன்னார். நாகலக்ஷ்மி அவர்கள் வாசிப்பின் உன்னதத்தை, உலக இலக்கியத்தின் இன்னொரு பக்கத்தை அறிந்து கொண்டது பிரான்சுக்குப் போன பிறகுதான்.

### உரோமப் பேரரசு ஒருநாளில் உருவாக்கப்பட்டதல்ல

பிரெஞ்சு மொழியில் கி.பி. 1190 காலப்பகுதியில் உருவான "Rome ne fu pas faite toute en un jour" என்ற பழமொழியை 1953 இல் ஜோன் கீவூட் ஆங்கிலத்தில் வெளியிட்ட பின்னரே "உரோமப் பேரரசு ஒருநாளில் உருவாக்கப்பட்டதல்ல :Rome wasn't built in a day" என்ற சொற்றொடர் உலகில் அதிகம் மேற்கோள் காட்டப்படும் ஆங்கில வாசகங்களில் ஒன்றாகியது. கிறீன் தமிழில் மருத்துவம் கற்பிக்க ஆரம்பித்தமையும் ஒரு நாளில் நிகழ்ந்ததல்ல.

அமெரிக்காவின் போஸ்ரன் துறைமுகத்திலிருந்து ஜேக்கப் பேர்க்கின்ஸ் என்ற கப்பலில் 1847 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சென்னையை நோக்கிப் புறப்பட்ட மருத்துவர் கிறீன் தனது நீண்ட கடற்பயணத்தின் போது கற்பதற்காகத் தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் எடுத்து வருகிறார். கிறீன் அமெரிக்காவிலிருந்து புறப்படும்போது தமிழ் இலக்கண நூலைத் தேடி எடுத்து வந்தமைக்கு ஒரு நோக்கம் இருந்தது. சவால்களை எதிர்கொண்டு 4 மாதங்களுக்கு மேற்பட்ட கடற்பயணத்தின் பின்னர் கிறீன் 1847 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4ஆம் திகதி சென்னையை அடைந்து, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஒக்ரோபர் 6ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடைந்தார்.

கிறீன் 1848 இல் மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து மருத்துவர்களைப் பயிற்றுவித்தார். இதனால் யாழ்ப்பாணம் மேலைத்தேச மருத்துவத்தின் பயனை அனுபவித்தது. கிறீன் 1852 இல் 'கல்வின் கற்றர்' எழுதிய அங்காதிபாதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்.

தமிழ்மொழி மூலம் ஆங்கிலமருத்துவத்தைக் கற்பிப்பதற்கு பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து நூல்களும் தமிழ்மொழியில் இருக்கவேண்டும் என்று கிறீன் கருதினார். கிறீன் தானே மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டதுடன் ஒரு சில நூல்களை மொழிபெயர்க்கும் பணியைத் தனது நம்பிக்கைக்குரிய மாணவர்களிடம் ஒப்படைத்தார். மொழிபெயர்ப்புப் பணியின்போது உதவுவதற்காகத் தமிழும் சம்ஸ்கிருதமும் வல்ல பண்டிதர் நெவின்ஸ் அவர்களை நியமித்ததுடன் அனைத்தையும் கிறீன் மேற்பார்வை செய்தார். பண்டிதர் நெவின்ஸ் அவர்களுக்கு டிஸ்பென்சரியிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து மாதந்தோறும் 2 ஸ்ரேலிங் பவுண் சம்பளமாக வழங்கப்பட்டது.

Translation மொழிபெயர்த்தல் என்ற சொல்லுக்கு தொல்காப்பியத்தில் 'அதர்ப்பட யாத்தல்' என்ற சொல் வழங்கப்படுகிறது. அதர்ப்பட யாத்தல்: மொழிபெயர்ப்பு எனத்தோன்றாதவாறு மூலநூல் போலவே தோற்றுமாறு அதனோடு பொருந்த அமைப்பது ஆகும்.

### கிறீனது தமிழுணர்வும் கலைச்சொல்லாக்க வழிமுறையும்

தமிழில் மருத்துவம் கற்பிக்க வேண்டும் என்ற சிந்தனை கிறீனுக்கு ஏற்பட்டபோது தமிழிற் கலைச்சொற்களை (துறை சார்ந்த சிறப்புச் சொல்) உருவாக்குவது அவசியம் என்று கருதி புதிய சொற்களை உருவாக்கும் முயற்சியில் கிறீன் ஈடுபட்டார். இதற்காக பின்வரும் விதிமுறைகளைக் கைக்கொண்டார். தமிழில் வழக்கத்திலிருந்த சொற்களுள் மிகப் பொருத்தமானதையும் சுருக்கமானதையும் தேர்ந்தெடுத்தார். உதாரணம்: Hepatic Disorder ஈரற் பிசகு, Histology திசுவறி விளக்கம், இ(கி)ஸ்தாலுகம்)



இரண வைத்தியம்.
வைத்தியாகரம்.
இந்துப் பதார்த்தசாரம்.

அடுத்துத் தமிழ்ச் சொற்களிலிருந்து பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து சிறுமாற்றங்களுடன் கலைச்சொல்லை உருவாக்கினார். ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் இருப்பின் அவைகளில் ஒன்றைத் தெரிவு செய்தார். உதாரணமாக Diagnosis என்பதற்கு நோய்நிதானம், ரோகஞும் ஆகிய சொற்கள் மருத்துவர் கிறீனால் பயன்படுத்தப்பட்டன. இங்கு ரோக என்ற சம்ஸ்கிருதச் சொல்லே தமிழில் ரோகம், உரோகம் என்று வழங்கப்படுகிறது. அதேபோல் நிதான என்ற சம்ஸ்கிருதச் சொல்லே தமிழில் நிதானம் என்று வழங்கப்படுகிறது.

இன்று Diagnosis என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நோய் நிர்ணயம், நோயறிதல், நோய்நாடல், நோய் ஆய்வுறுதி, நோயாய்வு முதலான பல பதங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழிலிருந்து தேவையான சொல் கிடைக்காதபோது கிறீன் ஆங்கில உச்சரிப்பையும் ஒலியையும் பேணி ஆங்கிலத்திலிருந்து முதனிலையைத் தெரிவு செய்து தமிழ் மரபிற்கு ஏற்றவாறு விகுதியை அமைத்தார்.

உதாரணமாக Aneurism அனுரிசம்;Vertebra வேடிபிறம்;Prostatic gland புரஸ்த கோளம், புரஸ்தி;Canula கனுலை, கனுலம்; Carcinoma, Cancer காசினோமம், கன்சர், புற்று, குலிரம்; Plasma - பிளஸ்மம் முதலான கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன.

அவ்வாறு முடியாதவிடத்து சம்ஸ்கிருதத்திலிருந்து தேவையான சொல் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக Anatomy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு உடற்கூற்றியல் என்ற செந்தமிழ்ச் சொல் இன்று வழங்கப்படுகிறது. ஆனால் கிறீனது காலத்தில் Anatomy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அங்காதிபாதம் என்ற வடசொல்லே வழங்கப்பட்டது. (அங்காதிபாதம் உச்சி முதல் உள்ளங்கால் வரை). மேலும் Surgeon என்ற சொல்லுக்கு இரணகன், சத்திரீகன் ஆகிய வட சொற்களை கிறீன் வழங்கினார். இன்று Surgeon என்ற சொல்லுக்கு சத்திரசிகிச்சை நிபுணர் என்ற சொல் ஈழத்தில் வழங்கப்படுகிறது. ஆனால் இதற்குரிய தமிழ்ச் சொல்லாக அறுவைமருத்துவர், அறுவை சிகிச்சை நிபுணர் என்பன தமிழ்நாட்டில் வழக்கிலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... வச ... 20 ஆம் நூற்றாண்டில் வேறுபாடுகள் நிறைய உண்டு. 19 ஆம் நூற்றாண்டில் மருத்துவர் கிறீன் உருவாக்கிய கலைச்சொற்களில் பெரும்பாலானவற்றை இன்றைய நிலையில் பயன்படுத்துவதில் பல இடர்ப்பாடுகள் உண்டு. எனினும் தமிழர்கள் கிறீனது மருத்துவத் தமிழ்க் கலைச்சொல்லாக்க முறைமையிலிருந்து பலவிடயங்களைக் கற்றுக்கொள்ளவும், சிந்திக்கவும், பின்பற்றவும் முடியும்.

நவீன இலத்திரனியல் சாதனம் ஒன்றிற்கு இன்று ஈழத்தில் ஒரு சொல்லும் தமிழகத்தில் பிறிதொன்றும் சிங்கப்பூர் மலேசியாவில் இன்னோர் சொல்லும் வழங்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

தமிழறிஞர், தமிழ்மொழிப்பற்றாளர் ஒருவரிடம் உள்ள மொழி மீதான தொலைநோக்கு, கரிசனை அமெரிக்கரான கிறீன் மருத்துவரிடம் 19ஆம் நூற்றாண்டில் காணப்பட்டது. மருத்துவர் கிறீன் அவர்கள் இந்தியாவிலுள்ள தமிழரின் கருத்தையும் அறிந்து தமிழ்நாட்டு அறிஞர்களின் ஒத்துழைப்புடன் ஒருமைப்பாடான கலைச்சொற்களைத் தமிழ்கூறும் நல்லுலகில், தமிழ்மக்களிடையே ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பரவும் வழி செய்தல் வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார்.

"ஒரே கலைச்சொற்களைப் பிரயோகிப்பதற்கு எல்லோருஞ் சம்மதிக்க முடியுமானால் அதுகுறித்துத் தாம் மகிழ்ச்சியும் ஊக்கமும் பெறக் காரணமுண்டு."

என்று திருவாங்கூரிலிருந்த மருத்துவர் லோ என்னும் அறிஞருக்கு 1865 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் கிறீன் குறிப்பிடுகின்றமை சிந்தனைக்குரியது.

### உலகத் தமிழர்களுக்காக தமிழக அரசு வழங்கும் தமிழ்ச் சொற்குவை

இற்றைநாளில் தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம் பிறமொழிகளின் துணையின்றி தனித்தியங்கவல்ல வளம்மிகு தமிழின் தனித்துவத்தைப் பேணவும் வளர்ந்து வரும் துறைகளுக்குரிய கலைச்சொற்களை உருவாக்கியும் உலகந் தழுவிய ஒருமைப்பாட்டைக் காணவும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதற்காக உருவாக்கியுள்ள இணையத்தளம்தான் சொற்குவை: https://www.sorkuvai.com/ இத்தளத்தில் பல்வேறு தகவல்களும் சொல்வயலும், பொருட்செறிவான அறிஞர்களது கட்டுரைகளும் வலையொளித் தொகுப்புக்களும் உள்ளன. மேலும் இன்றுவரை 7 இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொற்கள் காணப்படுகின்றன. ஒரு ஆங்கிலச் சொல்லுக்குரிய செந்தமிழ்ச் சொல்லை, பொருத்தமான மொழிபெயர்ப்பை இங்குதான் காணலாம்.

தமிழ்மொழியின் சொல்வளத்தைக் காத்தல், தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பெருக்குதல், தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்பைத் தவிர்க்கத் துணைநிற்றல் என்ற உயரிய நோக்கோடு தமிழ்(ச்) சொற்குவை தமிழர்களை மொழியால் ஒருங்கிணைத்து வருகிறது.

## உரு?

எந்தவோர் உருவும் சந்தேகத்துக்கிடமளிப்பதாகவிருப்பது அச்சுறுத்தலாகவேயிருக்குமென்பதால் முதலில் தெளிவாக அடையாளங்காணப்பட வேண்டும். அதற்கு சரியான நியாயப்படுத்தலுமிருக்க வேண்டும். தெளிவாக அடையாளங் காணப்பட முடியாத உருவொன்றிருப்பின் எச்சரிக்கையுடனிருப்பது அவசியம். முதற்பார்வையிலேயே ஓர் உரு தொடர்பில் கருதுகோளை முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது. உருவுக்கிடப்பட்ட பெயரை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கருதுகோள்களை உருவாக்குவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது குறித்த உருவை நேரில் காணும்போது ஏற்படக்கூடிய விலகலை இல்லாமலாக்கும். விலகல் இருக்கவே கூடாதென்பதல்ல. ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம் அவ்வளவுதான். எதிர்பார்ப்புக்கும் விருப்பத்துக்கும் இடமளிக்கும் வகையில் ஓர் உரு இருக்குமென்றில்லை. இருக்கலாம், இல்லாமலும் போகலாம். ஓர் உரு மனமகிழ்வளிக்கக் கூடியதாக மட்டும் இருப்பதில்லை. அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதாகவுமிருக்கும். திடுக்கிடவும் வைக்கும். நிம்மதியைக் கெடுக்கும். உறங்கவிடாமல் அச்சுறுத்தும். இதனால் ஒவ்வோர் உருவும் தெளிவாக அடையாளப்படுத்தப்படுவது மிக அவசியமானதென்பதை நன்குணர வேண்டும்.

உருவுக்கு மட்டுமல்ல ஒலிக்கும் இது பொருந்தும். எந்தவோர் ஒலியும் சந்தேகத்துக்குரியதாகவிருப்பது அச்சுறுத்தலுக்குள்ளாக்குதென்பதால் இங்கேயும் கருதுகோள்களுக்கு இடமளிக்கக் கூடாது. முதலில் குறித்த ஒலியைச் சந்தேகத்துக்கிடமின்றி அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அடையாளப்படுத்தலுக்கான சரியான நியாயப்படுத்தலிருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்துதான் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டு வரிசைப்படுத்தப்படலாம். பரந்த நோக்கில் இந்நிலைப்பாடு உருவுக்கும் ஒலிக்கும் மட்டுமல்ல உடனடியாக அடையாளங்காணப்பட்டு சரியான நியாயப்படுத்தலை முன்வைக்க வேண்டிய எதற்கும் பொருந்திவரக் கூடியதுதான். எம்மீது நேரடியாகத் தாக்கமேற்படுத்தாத தருணங்களில் இதற்கெல்லாம் எந்த அவசியமுமேற்படுவதில்லை என்பது நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமுமில்லை. மேலும் நீங்கள் வேறுவிதமாக எதிர்பார்த்திருந்தால் உருவுக்கும் அதன் செயற்பாட்டுக்கும் நேரடித் தொடர்பேதும் நிலவுவதில்லை என்று பொது நிலைப்பாடாகும். விதிவிலக்குமிருக்கலாம். ஏமாற்றமடைவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு இங்கேயும் கருதுகோள் எதனையும் முன்வைக்காமலிருப்பதே ஒரேயொரு மாற்றுவழியென நான் கருதுகின்றேன். அவ்வளவுதான். வேறில்லை.

# 2 நேர்காணல் கடவுள்

இராகவன்

## அதிகாரம்?

எவரிடமுள்ளதோ அவரைப் பணிந்து செல்ல வேண்டும். அது யாராகவுமிருக்கலாம். ஒரு குழந்தையாகலாம், சிறுவனாகலாம், சிறுமியாகலாம், வாலிபனாகலாம், கன்னியாகலாம், தம்பதியாகலாம், விதவையாகலாம், குடும்பமாகலாம், நாயாகலாம், பேயாகலாம், குரங்காகலாம்,எலியாகலாம். எவரானாலும் எதுவானாலும் அதிகாரம் இருந்தால் பணிந்தேயாகவேண்டும். அதிகாரமுள்ளவரின் நடவடிக்கைகள் குறித்துப் பாராட்டலாம் அல்லது மோசமாக விமர்சிக்கலாம். இரண்டிலொன்றுதான் வழமையானது. பாராட்டுவதென்பது ஒரு பொருட்டுமல்ல. ஆனால் மோசமாக விமர்சிப்பதென்பது ஆபத்தானது. அதிகாரம் விமர்சிப்பதை ஒருபோதும் விரும்புவதேயில்லை. மற்றது உண்மையில் ஏதோவொரு வகையில் அதிகாரத்தைக் கையளிப்பது நாங்கள்தான். அதிகாரத்தை கையளிக்கும்போது அது எங்கள் கண்களை மறைக்கும், கையளித்த பின்பு அதைப் பெற்றுக் கொண்டவரின் கண்களை மறைக்கும். அதிகாரத்தின் இயல்பென்பதே இதுமட்டும்தான். அதிகாரத்தைக் கையளிக்கும் முன்பு அதற்கென நாங்கள் தேர்ந்தெடுத்தவர் எங்களது கண்களுக்கு மிகப் பொருத்தமானவராகத் தெரிவார். கையளித்த பின்னர் அதேநபர் மிக மோசமாகத் தோன்றுவார். அப்போதுதான் விமர்சிக்கத் தோன்றும். அதனால் பொதுவாக மாற்றமேதும் நிகழ்வதில்லை.

அதாவது விமர்சிக்கப்படுபவருக்கு மாற்றமேதும் நிகழ்வதில்லை. ஆனால் விமர்சிப்பவர் ஆபத்தானவர் அல்லது மிக ஆபத்தானவர் எனக் கருதப்பட்டால் அவர் நிலைமாற்றப்படலாம். அல்லது மாயமாகலாம்.

இது அதிகாரத்திலிருந்து பெறப்பட்ட வெளிப்படையுண்மை. பொதுவாக நாமெல்லோருமே அதிகாரம் செலுத்துவதை விரும்புகிறோம். அதிகாரம் செலுத்தாதவர் என எவருமில்லை. அதிகாரம் செலுத்தாதது என எதுவுமில்லை. ஒவ்வொருவரும் தம்மால் அதிகாரம் செலுத்தக்கூடிய எல்லைவரைக்கும் அதைச் செய்கின்றார்.

ஒவ்வொன்றும் தன்னால் இயன்றளவுக்கு அதைச் செய்கின்றது. இதில் மறுத்துரைப்பதற்கெதுவுமில்லை. இதுவுங்கூட அதிகாரத்திலிருந்து பெறப்பட்ட வெளிப்படை உண்மைதான். வெளிப்படை உண்மைகளைக் கேள்விக்குட்படுத்தவோ விமர்சிக்கவோ முடியாது. இதில் மறுப்பதற்கிடமில்லை.

இப்போது நான் அதிகாரம் செலுத்த விரும்புகிறேன். அதிகாரம் செலுத்தியும் வருகிறேன் என்பதை நான் மறுக்கமுடியாது. அதேபோல் நீங்களும் மறுக்கமுடியாது. இதுதான் யதார்த்தம். இதைமறுப்பதென்பது முழு அபத்தமாகும். இன்னுமொன்று அதிகாரம் எல்லைக்குட்பட்டதாகத் தோற்றமளிக்கலாம். ஆனால் உண்மையில் அதுவொரு முடிவிலியாகும். ஓர் எல்லை முடிவுறுமிடத்தில் பிறிதொன்று தொடங்கும். அது முடிவுறுமிடத்தில் வேறொன்று தொடங்கும். இவ்விதமாகத் தொடர்ந்தியங்கியபடியேயிருக்கும். முடிவென்பது மாயத்தோற்றம்.



## கற்பனை?

மிக அவசியமானது. உண்மையில் வாழ்க்கையின் தத்துவமே இதுதான். கற்பனை செய்யாதவரென்று எவருமில்லை. ஒவ்வொருவரும் கற்பனைசெய்து கொண்டேதானிக்கிறோம். ஏனென்றால் கற்பனை ஒரு மனநோய் நிவாரணியென்பதை மறுப்பதற்கில்லை. கற்பனை மிகுந்தால் தற்கொலை குறையும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கக் கூடும். ஆனால் இது செம்மையாக்கப்படாதொன்றாகும். கற்பனையென்பது நேர்மறையாகலாம், எதிர்மறையாகலாம். கற்பனை மிகுந்தால் தற்கொலை குறையுமென்பது மேலோட்டமானது. நேர்மறையான கற்பனை மிகுந்தால் மட்டுமே தற்கொலை குறையும். எதிர்மறையான கற்பனை மிகுந்தால் தற்கொலை கூடுமல்லவா? கற்பனை ஒரு மனநோய் நிவாரணியென்பதும் இதைப் போன்றதுதான். நேர்மறையான கற்பனைதான் மனநோய் நிவாரணியாகலாம். எதிர்மறையான கற்பனையென்பது மனநோய் ஊக்கியாகலாம். கற்பனையென்பது பொதுவாக நேர்மறையான கற்பனையாகத்தான் கருதப்படுகிறது. எதிர்மறையான கற்பனையை யாரும் கவனத்திற்கொள்வதில்லை. ஆனால் இதைத் தான் நாங்கள் முக்கியத்துவப்படுத்த வேண்டும். நேர்மறையான கற்பனையென்பது ஒரு தற்காலிக இன்பமே.

அதற்காகப் புறக்கணித்துவிடமுடியாதென்பதும் கவனத்திற்கொள்ளத்தக்கது. அது முக்கியமானதுங்கூட. இதற்காகவே கற்பனையை வளர்த்துக் கொள்பவர்களுமிருக்கத்தான் செய்கின்றனர். அந்தந்தக் கணங்களில் இது அவசியமானதாகவிருக்கும். நானுமிதை எதிர்கொண்டிருக்கிறேன். இலட்சக்கணக்கில் பரிசு வழங்கப்படுமென விளம்பரப்படுத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டியொன்றின் அறிவித்தலானது எனக்கு முடிவுத் திகதிக்கு மூன்று நாள்கள் முன்பாகக் கிடைத்திருந்தது. இரவும் பகலுமாக முயன்று போட்டிவிதிகளை அனுசரித்து ஓர் எழுத்தாக்கத்தைச் செய்து எனது நெருங்கிய நண்பரொருவரின் உதவியோடு தட்டச்சுச் செய்து குறித்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவித்தேன். 'தங்கள் எழுத்தாக்கம் கிடைத்தது. போட்டியில் கலந்து கொண்டமைக்கு நன்றி. போட்டி முடிவுகள் உரிய காலத்தில் தங்களுக்கு அறிவிக்கப்படும்' என உடனடியாகப் பதில் கிடைத்த தருணத்தில் பரிசு கிடைத்தமைக்கொப்பான இன்பத்தை அனுபவித்தேன். அப்போது அது எனக்குத் தேவைப்படுமொன்றாக இருந்தது. ஏனெனில் அப்போது நான் ஏதோவொரு சம்பவத்தால் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருந்தேன். அந்த நெருக்கடியிலிருந்து விடுபட அது எனக்குப் பெரிதும் உதவியது. அடுத்த கட்டமாகக் குறிப்பிட வேண்டிய இன்னொன்றுமுண்டு. போட்டியின் முடிவுத் திகதிக்கு மூன்று நாள்கள் முன்னதாக இந்த அறிவித்தல் எனக்குக் கிடைத்தமைக்கு என்ன காரணம்? எனக்குத்தான் முதற்பரிசு என விதிக்கப்பட்டிருப்பதால்தான் இது நிகழ்ந்திருக்கிறது. சர்வநிச்சயமாக எனக்குத்தான் முதற்பரிசு என உள்மனம் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தது. மற்றது இந்த எழுத்தாக்கப் போட்டியை இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் ஒரு மிகப் பிரபலமான வாரஇதழ்தான் நடத்தியதென்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இதனால் அந்தப் போட்டியில் எனக்கே முதற்பரிசு கிடைப்பதாகவும் குறித்த வாரஇதழ் என்னைப் பேட்டியெடுத்து எனது புகைப்படத்தோடு பிரசுரிப்பதாகவும் ஒரு நாளிலேயே நான் உலகப் புகழ்பெற்றவனாகி விடுவதாகவும் கனவுகூடச் சம்பவித்தது.

இவ்வெழுத்தாக்கப் போட்டிக்கு நான் பிரதியனுப்பி ஐந்து மாதங்களின் பின்னர் 'போட்டிக்கு மின்னஞ்சலில் கிடைத்த பிரதிகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டுவிட்டதாகவும் சாதாரண தபாலில் கிடைத்த பிரதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அப்பணி முடிந்தும் நடுவர்களுக்கு அனுப்பப்பட்டு ஒரு மாதத்துக்குள் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும்' எனவும் இன்னொரு தகவல் மின்னஞ்சலில் கிடைத்திருந்தது. இத்தகவல் எனக்கு இன்னும் மனமகிழ்வை ஏற்படுத்தியது. இதன்பின்னர் போட்டிக்காக முடிவுத்திகதி கடந்து ஒருவருடங்கடந்தும் வேறு தகவலேதும் கிடைக்கவில்லை. பின்னர் ஒருநாள் அலுவலகத்தில் மதியபோசன இடைவேளையின்போது நான் தற்செயலாக ஒரு வலைத்தளத் தேடுதலில் ஈடுபட்டிருந்தபோது குறித்த எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகியிருப்பதைப் பார்த்தேன். அதில் எனக்கு எந்தவொரு பரிசும் கிடைத்திருக்கவில்லை. எனினும் பரிசு கிடைத்திருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய மகிழ்வைக் காட்டிலும் அதிகமாகநான் அதற்கு முன்பாகவே தற்காலிகமான இன்பத்தைப் பெற்றிருப்பதை உணரமுடிந்தது. எனக்குத்தான் இப்போட்டியில் முதற்பரிசு என விதிக்கப்பட்டிருப்பதாக உள்மனம் சொன்னதை நினைத்துச் சிரித்துக் கொண்டேன். இதையெல்லாம் நானிங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் தற்காலிகமாகக் கிடைக்கும் இன்பத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காகவேயாகும்.

ஒரு போட்டியில் பரிசு கிடைக்குமென்பதற்காக மட்டும் அதில் கலந்து கொள்ளக்கூடாது. போட்டியில் பங்கேற்றதிலிருந்து போட்டி முடிவுகள் வெளியாகும் வரையிலான காலப்பகுதியில் நமக்குள் தோன்றும் கற்பனை மற்றும் தற்காலிகமாகக் கிடைக்கும் பேரின்பம் என்பவற்றுக்காகவும் கலந்துகொள்ள முன்வரவேண்டும் என்பதே நான் முன்வைக்கும் கருத்தாகும். அடுத்ததாகவொன்றையும் குறிப்பிடவிரும்புகிறேன். சில உளவியலாளர்கள் 'உங்களது கட்டுப்பாட்டில்லாத ஆனால் நீங்கள் பங்கேற்றேயாகவேண்டிய நிகழ்வொன்றைக் குறித்து எதிர்மறையான கற்பனையுடன் செல்லுங்கள்' எனக் குறிப்பிட்டுள்ளதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டியதாகவிருக்கிறது. இதனை விளக்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டை முன்வைக்கிறார்கள். அதாவது எழுத்துப்பரீட்சையொன்றுக்கு நீங்கள் தோற்ற வேண்டியிருந்தால் வினாத்தாளில் இடம்பெறும் வினாக்கள் அனைத்தும் கடினமானவையாகவேயிருக்கும். அவற்றுக்கு என்னால் சரியாக விடையளிக்க முடியாது எனும் மனநிலையோடு செல்ல வேண்டுமென்றும் அவ்விதம் சென்றால் வினாத்தாளில் இடம்பெறும் வினாக்கள் பொதுவாக இலகுவானவையாகவே இருக்கும் என்பதும் நேர்முகத் தேர்வொன்றுக்குத் தோற்ற வேண்டியிருந்தால் அந்தத்தேர்வில் என்னால் விடையளிக்க முடியாத கடினமான கேள்விகளே என்னிடம் கேட்கப்படும்.

அவற்றுக்கு என்னால் இலகுவாக விடையளிக்க முடியாதிருக்கும் என்ற மனநிலையோடு அத்தேர்வுக்குத் தோற்றச் சென்றால் எதிர்பார்த்த மாதிரியில்லாமல் மிகவும் இலகுவானதாகவேயிருக்கும் என்பதும் அவர்களால் முன்வைக்கப்படும் கருத்தாகும். இதைச் சிலவேளை நீங்களோ நானோ நேரடியாகவே உணர்ந்திருக்கலாம். சரி அதை விடுவோம். என் அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன். வீணாகக் கற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொண்டால் ஏமாற்றமடையத் தேவையில்லை. ஏமாற்றமடைவது உங்களுக்கு ஒரு பொருட்டேயில்லையென்றால் எல்லையில்லாமல் கற்பனை செய்துகொள்ளலாம். அதிலிருந்து தற்காலிக இன்பமாவது கிடைக்கலாமல்லவா? மற்றும் கற்பனையில் மிதப்பவர்களையும் கற்பனையே வாழ்வாகக் கொண்டவர்களையும் பற்றித் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை. கற்பனையில் மிதப்பதும் கற்பனையே வாழ்வாகக் கொள்வதும் அவரவர் தனிமனித உரிமை. அதிலே நாங்கள் எதற்காகத் தலையை நீட்ட வேண்டுமா? நான் தொடக்கத்திலிலேயே கற்பனை மிக மிக அவசியமானதெனச் சொல்லியிருக்கிறேன். அதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை. எல்லையற்ற விடயங்களுள் இதுவுமொன்று என்பதால் ஒரு சாதகமான மட்டத்தில் பேண வேண்டியது முக்கியமானதெனக் கருதுகிறேன். இந்தச் சாதகமான மட்டத்தைக் கடந்து செல்வதைத்தான் நான் வீணான கற்பனையெனக் குறிப்பிடுகிறேன். கற்பனையென்றால் அது கற்பனைதான். அதிலென்ன வீணானது? விரயமானது? இவ்விதமாக வேறுபடுத்திப் பார்ப்பது முழு அபத்தமானது எனக் கேள்வியெழுப்புகிறவர்களும் இருக்கிறார்கள். கற்பனையைப் பற்றிய பகுப்பாய்வில் இறங்குவதுதான் பிரச்சினை. அது கற்பனையில் மிதப்பவர்க்கும் கற்பனையை வாழ்வாகக் கொண்டவர்களுக்கும் அவசியமில்லைத்தானே? அதற்காகப் பகுப்பாய்வு செய்பவர் சும்மாயிருக்கவும் முடியாதுதானே? எனவே கற்பனையில் மிதப்பவர் மிதக்கட்டும். கற்பனையில் வாழ்பவர் வாழட்டும் கற்பனையைப் பகுப்பாய்வு செய்பவர் செய்யட்டும். அதுபோதும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாங்காய்க்குப் பிரம்படி பட்ட கதை

○ பேராசிரியர் கி.விசாகரூபன்

'அதிபர் வரட்டாம்!!'
சொன்னவர் எமது குழுவுக்குப் பொருந்தாத வாத்தியார். 'ஏன் வரச்சொன்னவர்?' என்று கேட்க ஆசை. கேட்க முடியாது, வலயமட்ட, கோட்டமட்டப் போட்டிகள் எவற்றிலும் வெற்றியீட்டியதாக ஞாபகம் இல்லை. சொன்ன வாத்தியாரின் 'குமுண் சிரிப்பு' பலவற்றையும் அசைபோட வைத்தது. குவாட்டஸ் பீலியால இறங்கேக்கை அவர் கண்டது எனக்கு ஞாபகம் வந்தது. நான் மட்டுமல்ல. 'ஸ்ரீயுடன் ஐவரானோம்'. அதிபர் முன்பு கொண்டு வரப்பட்டேன்.
'சேர்!!! ' இதுநான்.
'கதை வேணாம். நேற்று நீயும் அவங்களும் பாடவேளையில குவாட்டர்சுக்குப் பக்கத்திலுள்ள மாமரத்தில மாங்காய் பிடுங்கினீங்களா?' இது அதிபர்.
என்ன பதிலுக்கும் அடிவிழும் சூழல். பொருத்தமான பொய்யை இணைக்க அவகாசமும் இல்லை. அதிபரோ அடிமட்டத்தை விழுங்கிய நிலையில். கையில் போகத்துக்கு வெட்டிய பூவரசின் இளம்பிஞ்சுக் கம்புகளின் பிணையல். பிறகென்ன? அடிவாங்கத் தயாராக எனது குண்டலினி சக்தியை உள்ளங்கைக்குள் இறக்கி விரல்களை விரித்துப் பிடிக்கிறேன்.
அதிபர் சித்தமோ வேறுவிதமாக இருந்தது.
'காற்சட்டையை இளக்கி பின்பக்கத்தால இறக்கிப் பிடியும்....' மறுப்பதோ, தாமதிப்பதோ 'பின்'விளைவுகளை அதிகப்படுத்தலாம். கணநேரத்துக்குள் எல்லாமே முடிந்து விட்டது. 'சுள்ளென்றிருந்தது'.
'அடுத்தவனை வரச்சொல்லு!'
வெளியே வருகிறேன்.
'என்னவாம் அதிபர்? '
நான் நடந்ததைச் சொல்லவில்லை. சொன்னால் 'அழுது புரண்டு' அடியைத் தவிர்த்து விடுவாங்களோ என்ற நப்பாசை.
'மாங்காய்ப் பிரச்சினை தான் சும்மா விசாரிச்சவர். சாப்பாட்டுச் சாமான் தானே எண்டவர்.'
'நல்ல மனுசனடா' இது மற்றவன்.
அந்த வேதனையிலும் தகவல் சொன்ன வாத்தியாரின் அதே 'குமுண் சிரிப்பு' எனக்குள்ளும் வந்து போகிறது.
ஒருவர் பின் ஒருவராக......
ஒருவரும் தத்தமக்கு அடி விழுந்த கதையை ஒருவருக்கும் சொல்லவில்லை.
ஆனால் பாருங்கோ அதிபரின்ர 'ஒபிசுக்குள்' போன 'நடையில்' ஒருவரும் திரும்பி வரவில்லை. இப்போதைய மினிபஸ்சுகள் போல ஒரு 'சயிற் இழுப்பு'....
வகுப்புக்குள் வந்த போதுதான் சிவபெருமானுக்கு அடிச்ச அடி போல எல்லோருக்கும் அடிவிழுந்த கதை தெரிஞ்சுது. இதில துன்பம் என்னவெண்டால் பாருங்கோ. அண்டைக்கெண்டு மூன்றுபேர் உள்ளூடுப்பும் போடவில்லை. ஆனாலும் நாங்கள் சோரவில்லை. அடுத்த மாங்காய் சீசனுக்காகக் காத்திருந்தோம். ■



## எதிர்காலம் பற்றிய குறிப்பு

பாலைவன சுடு மணலில்
ஊரும் பாம்புகள் இனி
எனது வீட்டின்
செல்லப்பிராணியாகலாம்.

மடல் பிழந்து
வறண்ட மதுவை சொரியும்
பேரீச்சை மரங்கள்
நிழல் மரங்களாகலாம்.

பட்டிப் பொங்கல் விட்டொழிந்து
ஒட்டகப் பொங்கல்
தேசிய பண்டிகையாகலாம்.

உஷ்ண மணல் வெளியில்
உருண்டு விளையாடப்
பழகும் குழந்தைக்கு
ஒட்டகப்பால் பானமாகவும்
கள்ளிப்பால் ஒத்தடமாகவும்
ஆகலாம்

இதுதான் நம்
எதிர்காலம் பற்றிய குறிப்பு.

வாழிய
நமோ நமோ மாதா

கவிஞர் வேல். லவன்

# 115 சொற்சிலம்பம் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | ■ | |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | ■ |
| 18 | | | ■ | 19 | | | 20 |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:......................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................................................
கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. வித்தியாசமானது 6. கையால் அளவிடும் அளவு 7. வேகம் 8. குளிர்மை 9. கடும் வேகம் 11. ஒருபோப் பிரபந்தம் 12. நோ 13. ஒரு மரக்கறிவகை 15. பற்களினால் பற்றுவதால் ஏற்படுவது 16. யானைக்கு உள்ள விசேட உறுப்பு 17. ஒரு பறவை 18. அன்பின் வகை 19. ஒரு வாசனைத் திரவியம் 21. ஓர் அளவிடை அலகு 22. ஒரு சங்குவகை

### மேலிருந்து கீழ்

1. ஒரு நட்சத்திரம் 2. தலைக்குடுமி 3. தினசரி மாறுவது 4. மன்மதன் மனைவி 5. மறைந்திருந்து உயிர்பறிப்பது 8. பெருக்கல் குறியீடு 10. கணக்குப் பார்த்தல் 11. உயிரை ஒன்றுக்காகப் பறித்தல் 12. திறை 13. பழைய கிழிந்த துணி 14. தமது 15. பூச்சு மருந்தின் வடிவம் 16. பொருந்தாத தன்மை 17. ஒரு கிலோவில் இது ஆயிரம் 19. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர் 20. செய்

### சொற்சிலம்பம் போட்டி 114 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**
1. திகைப்பு 4. வகுப்பு 6. ருது 7. சங்கம் 8. வீல் 10. புகழ் 12. நல்வழி 14. தலைச்சன் 16.சிம்மம் 19. பாதி 20. சாதி 21. அம்பாரி 22. மதுரை

**மேலிருந்து கீழ்**
1. திருப்புதல் 2.கைது 3. புசல் 4. தகவல் 5. ரம் 8. வீழ்ச்சி 9. விழி 11. கலை 12. நன்மதி 13. வடை 15. சம்பாரி 17. கதிரை 18. சாம் 20. சாது

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.115**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**06.01.2023** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி இலக்கம் 114 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
சி.பிரணவி
187 உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**
ருஷாளினி அன்பழகன்
6ஆம் வட்டாரம்
நயினாதீவு

**3 ஆம் பரிசு**
இரா.சந்[illegible]
மாசியப்[illegible] வீதி
ஏழாலை

**4 ஆம் பரிசு**
[illegible]
கைதடி மேற்கு,
கைதடி

**5 ஆம் பரிசு**
ச.வாரித்தம்பி
கைதடி மேற்கு,
கைதடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org